Registered as a Newspaper

NEW MASTER INSTITUTE
B. M. C. Lane,
JAFFNA.
91 A/L
Week End Classes
பிரிவு II
விரைவில்
ஆரம்பம்

# உதயன்

விலை
ரூ2/50

NEW MASTER INSTITUTE
B. M. C. Lane,
JAFFNA.
91 A/L
(Sat & Sun)
பிரிவு I
7.30 - ZOOLOGY
8.30 - BOTANY
10.30 - CHEMISTRY
11.30 - PHYSICS
7.30 - PURE & APPLIEDMATHS

சுடர்: 4 சுக்கில ஆண்டு ஆனி மீ 28 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1409 ஜுல்ஹஜ் பிறை 08 (12 - 07 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 185

# ராஜீவின் விசேட தூதுவர் கொழும்பு விரைகிறார்

## அமைதிப்படை விவகாரம் குறித்து முக்கிய பேச்சுக்கள் நடத்துவார்

புதுடில்லி, ஜூலை 12

இந்திய அமைதிப்படை இலங்கையிலிருந்து விலகுவது சம்பந்தமாக இந்தியாவின் நிலைப்பாட்டைத் தெரிவிப்பதற்காக, பிரதமர் ராஜீவ் காந்தியின் விசேட பிரதிநிதி ஒருவர் இன்று புதன்கிழமை கொழும்புக்கு விரைகிறார்.

பிரதமரின் பிரதம செயலாளரான திரு. பி. ஜி. தேஷ்முக்கே அந்த விசேட பிரதிநிதியாவார். அவர் இலங்கை ஜனாதிபதி திரு. பிரேமதாசாவைச் சந்தித்துப் பேசுவார். அப்போது திரு. பிரேமதாசா இந்தியப் பிரதமருக்கு எழுதிய இரண்டாவது கடிதத்திற்கான பதிலையும் அவர் கையளிப்பார்.

கடந்த ஜூன் மாதம் முதலாம் திகதி பத்தரமுல்லையில் நடைபெற்ற மத வைபவம் ஒன்றில் பேசுகையில், இலங்கையிலிருந்து இந்திய அமைதிப்படை ஜூலை (இந்த மாத) இறுதிக்குள் திரும்பவேண்டும் என்று தாம் இந்தியாவிடம் கேட்க இருப்பதாக ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச கூறியிருந்தார்.

அன்றிலிருந்து இந்திய அமைதிப்படை இலங்கையிலிருந்து விலகுவது சம்பந்தமான விவகாரம், இரு நாடுகளுக்கும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



வேலைநிறுத்த விவகாரம் பெரியவரின்ரை கவனத்துக்கு வந்திட்டுது போலை... இனி புதிய மாற்றம் எதுவும் வரும் எண்டு எதிர்பார்க்கலாமே... பின்னை...!

# கொழும்பில் நேற்று பரவலாக கிரனேட் வீச்சுச் சம்பவங்கள்

—கொழும்பிலிருந்து சிறப்புச் செய்தியாளர்—

கொழும்பு, ஜூலை 12

கொழும்பில் நேற்று பல இடங்களிலும் போக்குவரத்திலீடுபட்ட பஸ்கள் மீது கிரனேட்டுகள் வீசப்பட்டன.

கொழும்பு புறக்கோட்டையில் அரசமரச் சந்திப் பகுதியில் இடம்பெற்ற கிரனேட் வீச்சுச் சம்பவத்தில் சப் இன்ஸ்பெக்டர் ஒருவரும், இரு பொலீஸ் கான்ஸ்டபிள்களும், ஏழு பொதுமக்களும் காயமடைந்தனர். படுகாயமுற்ற இரு பொலீஸ் கான்ஸ்டபிள்களும் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஹவ்லக் வீதி - மாயா அவெனியூவில் தனியார் பஸ் மீது கிரனேட் ஒன்று வீசப்பட்டது. எனினும் இலக்குத் தவறியதால் பஸ் சேதம் ஏதுமின்றித் தப்பியது. ஆனால் அந்த வழியே மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த ஒருவர் காயமுற்றார்.

புறக்கோட்டை சவுண்டர்ஸ் வீதியிலும் பஸ் ஒன்றின் மீது கிரனேட் வீசப்பட்டதில் பஸ் சேதமுற்றது.

கொழும்பில் நேற்று பெருமழை பெய்தது. அதேவேளை போக்குவரத்துச் சபை பஸ்களும் சேவையில் ஈடுபடாததால் பொது மக்கள் பெரிதும் கஷ்டமுற்றனர்.

மக்கள் தூர இடங்களில் இருந்து நடந்து வருவதையும் காணக் கூடியதாக இருந்தது.

கொழும்பிலும் சுற்றுப்புறத்திலும் தொடர்ந்து பதற்றம் நிலவியது. (உ-5)

## இலங்கை முஸ்லிம்களுக்கு பாதிப்பில்லை

றியாத், ஜூலை 11

சவுதி அரேபிய மக்கா நகரில் நடந்த குண்டுவெடிப்பில் இலங்கையர் எவரும் பாதிக்கப்படவில்லை என முஸ்லிம் விவகார துணை அமைச்சு அறிவித்துள்ளது.

மக்காவில் ஹஜ் பெருநாளை முன்னிட்டு உலகம் முழுவதிலுமிருந்து 15 லட்சத்துக்கும் அதிகமான முஸ்லிம்கள் குழுமியிருப்பது தெரிந்ததே.

(முன்னர் வந்த செய்தி 5ஆம் பக்கத்தில்) (அ-9)

## யாழ். பல்கலைக்கழகத்திற்கு 785 மாணவர்கள் தெரிவு!

கொழும்பு, ஜூலை 12

1989 — 90 கல்வியாண்டில் யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி கற்க 785 மாணவர்களை பல்கலைக்கழக மான்ய ஆணைக்குழு தெரிவுசெய்திருக்கிறது.

விவரம் வருமாறு:

★ கலை - 175.
★ பௌதீக விஞ்ஞானம் - 180.
★ நிர்வாகம் - 100.
★ வர்த்தகம் - 100.
★ உயிரியல் விஞ்ஞானம் - 100.
★ மருத்துவம் - 105.
★ விவசாயம் - 25.

## தனியார்துறைக்குபென்ஷன் அடுத்த ஜனவரியில் சட்டம்

கொழும்பு, ஜூலை 12

தனியார் துறை ஊழியருக்கு சேமலாபநிதிக்கு பதிலாக பென்ஷன் வழங்கும் சட்டம் வருகிற ஜனவரி முதல் அமுலுக்கு வரவுள்ளது.

தொழில் ஆணையாளர் திரு. ஜி. வீரக்கூன் இத் தகவலை வெளியிட்டார்.

இதற்கான நகல் சட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. (உ-எ)

## இரு ஈரோஸ் உறுப்பினர்கள் கொலை

யாழ்ப்பாணம், ஜூலை 12

ஈரோஸ் அமைப்பின் உறுப்பினர்களான ரமேஸ் (தம்பலகாமம்), விநோதன் (கட்டைப்பறிச்சான்) ஆகியோர் தம்பலகாமத்தில் வைத்து திங்கட்கிழமை கொலையுண்டதாக ஈரோஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-10-3)

## கிழக்குக்கு இடமாற்றம் கேட்கின்றனர் பொலீஸார்!

யாழ்ப்பாணம், ஜூலை 12

யாழ்ப்பாணம் பொலீஸில் கடமையாற்றும் தமிழ்ப் பொலீஸாரில் சிலர் கிழக்கு மாகாணத்துக்கு இடமாற்றம் கோரியுள்ளனர் என்று தெரிய வருகிறது.

இவர்களின் கோரிக்கை உடனடியாகப் பரிசீலிக்கப்பட்டு அதற்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் நம்பப்பட்டு வருகிறது.

நான்கு பேருக்கு ஏற்கனவே இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (ஒ-10)

## விளான் பகுதியில் மோதல்; ஷெல் வீச்சில் ஒருவர் காயம்!

விளானை அண்டிய பகுதியில் நேற்று மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது. மோதலைத் தொடர்ந்து ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

பண்டத்தரிப்பு வீதி, சண்டிலிப்பாய் வீதி ஆகிய பகுதிகள் வரை ஷெல்கள் போய் வெடித்ததாக அறியவந்தது.

பண்டத்தரிப்பைச் சேர்ந்த மேரி திரேசா லோறன்ஸ் (வயது 14) என்பவர் ஷெல் வீச்சினால் காயமடைந்தார். இவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலதிக சேத விபரங்கள் குறித்து தெரியவில்லை. (ஒ-9)

## செய்திச் சாரம்

### கோப்பாயில் தேடுதல்

யாழ்ப்பாணம், ஜூலை 12

கோப்பாய், இருபாலைப் பகுதியில் நேற்றுக் காலை சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டன.

பலர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டு பின் விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3-10-72)

### ஸியா மனைவியின் கோரிக்கை

டாக்கா, ஜூலை 12

இலங்கையில் இந்திய அமைதிப் படையினர் தொடர்ந்து இருப்பதை ஐ. நா. சபை கண்டிக்க வேண்டும் என பங்களாதேஷ் தேசிய வாதக் கட்சி கோரியுள்ளது.

இக்கட்சியின் தலைவியாக இருப்பவர் முன்னாள் ஜனாதிபதி ஸியா-உர் - ரஹ்மானின் மனைவியாராவார். (உ-எ)

### முகமாலையில் இளைஞர் பலி!

பச்சிலைப்பள்ளி, ஜூலை 12

முகமாலை காரைக்காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் துப்பாக்கிப் பிரயோகமும் குண்டு வீச்சும் இடம்பெற்றது.

இச்சம்பவத்தின்போது காட்டுக்கு பனை மட்டை வெட்டச் சென்ற இராசதுரை இராசரத்தினம் (வயது 24) என்ற இளைஞர் பலியானார். (உ-117)

### சூடுபட்டு பெண் காயம்

அச்சுவேலிப் பகுதியில் நேற்று பெண் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்தார்.

காயமடைந்தவர் செல்வராஜா ராஜேஸ்வரி (வயது 42) என்பவர் ஆவார். இவர் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆகாயத்தை நோக்கி வைக்கப்பட்ட வேட்டு கீழே வந்து பெண்ணைத் தாக்கியதாகச் சொல்லப்பட்டது. (ஒ-9)

### இருவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஜூலை 12

உடற் தாக்குதலுக்கு இலக்கான இருவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போதே இவர்கள் தாக்கப்பட்டனர் எனச் சொல்லப்படுகிறது.

தம்பையா சுந்தரலிங்கம் (வயது 25) ஊரெழு, துரைச்சாமி அருமைச்சோதிலிங்கம் (வயது 35) வல்வெட்டித்துறை ஆகியோரே அந்த இருவருமாவார் (ஒ-9)

### அச்செழுவில் இளைஞர் கொலை!

யாழ்ப்பாணம், ஜூலை 12

அச்செழு அம்மன் கோவிலடியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இறந்து கிடந்த இளைஞனது சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

கொலையுண்டவர் நீர்வேலியைச் சேர்ந்த சுப்பன் இராஜேந்திரம் (வயது 20) என அடையாளம் காணப்பட்டார். (ஒ-10)

### லொறிகள் மூலம் வரும் தபால்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 12

வடபகுதிக்கான தபால்கள் கொழும்பில் இருந்து வவுனியாவுக்கு லொறிகள் மூலமே கொண்டு வரப்படுகின்றன. இந்த லொறிகளுக்கு ஸ்ரீலங்காப் படையினர் பாதுகாப்பு வழங்குகின்றனர்.

ரயில் மற்றும் போக்குவரத்துகள் சீர்குலைந்ததை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-10

# வியாபாரிமூலையில் 6 பொதுமக்கள் பலி!

வடமராட்சி, ஜூலை 12

பருத்தித்துறை வியாபாரிமூலையில் நேற்று முந்தினம் இடம்பெற்ற அசம்பாவித சம்பவங்களில் ஆறு பொதுமக்கள் பலியானதாகவும், பலர் காயமடைந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இறந்தவர்கள் விபரம் வருமாறு:-

ரதிபன் யோகரட்னம் (6 வயது) இலகடி அல்வாய், கே. துரைசாமி (26 வயது) அல்வாய், இராசையா இராசநாயகம் (37 வயது) ஒடக்கரை, நாகராசா லோகேஸ்வரன் (30 வயது) புலோலி, விக்கினேஸ்வரன் நந்தகுமார் (23 வயது) தம்பசிட்டி.

இவர்கள் தவிர மற்றொரு இளைஞர் மந்திகை சந்திக்குச் சமீபமாக துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

இச் சம்பவங்களின் போது காயமடைந்து மந்திகை வைத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாரிகள் குழு பார்வையிட்டது

வடமராட்சி, ஜூலை 12

பருத்தித்துறை வியாபாரிமூலையில் நேற்று முன்தினம் அசம்பாவிதங்கள் இடம்பெற்ற இடங்களை நேற்றுக் காலை இந்திய இராணுவ உயர்மட்ட அதிகாரிகள் குழு ஒன்று பார்வையிட்டது.

இதனால் இப் பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. (ஒ-160)

## வடக்கு-கிழக்கில் வெளியேறுவோர் புகலிடம் அளிப்பதற்கு கொழும்பில் நிலையம்!

பல்வேறு குழுக்களால் மேற்கொள்ளப்படும் ஆயுதப் பயிற்சிக்கான கட்டாய ஆட்சேர்ப்பைத் தவிர்ப்பதற்காக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து வெளியேறியுள்ளவர்களுக்கு தற்காலிக புகலிடம் அளிப்பதற்காக பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் அரசாங்கம் நலன்புரி நிலையம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

—இவ்வாறு இலங்கை அரசாங்கம் நேற்று அறிவித்தது.

இவ்வசதியைப் பயன்படுத்த விரும்புவோர் தேசிய அடையாள அட்டை அல்லது வேறு தஸ்தாவேஜுகளை சமர்ப்பித்து நிலையத்தில் தங்கலாம்.

இந்த நிலையம் இன்று காலை 8 மணி முதல் இயங்க ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

# மத்திய அமைப்புப் பிரதிநிதிகள் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு

## கோரிக்கைகளை ஆராய மூவர் குழு

கொழும்பு, ஜூலை 12

ஐக்கிய தேசியத் தொழிலாளர் போராட்ட மத்திய அமைப்பின் பிரதிநிதிகள், நேற்று ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவைச் சந்தித்துப் பேசுவார்த்தை நடத்தினார்கள்.

அதனைத் தொடர்ந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் போக்குவரத்து ஊழியர் கோரிக்கை பற்றி ஆராய்வதற்காக மூன்றுபேர் கொண்ட குழுவொன்றை ஜனாதிபதி நேற்று நியமித்தார்.

அமைச்சரவை உபகுழுக்களின் செயலாளர்களான திரு. டபிள்யூ. டி. ஜெயசிங்க, திரு. ஐவன் சமரவிக்கிரம ஆகியோரும் அப்பீல் நீதிமன்றத்தின் முன்னாள் நீதியரசருமான திரு. டி. ஜி. ஜெயலத்தும் இந்தக் குழுவில் இடம்பெறுகின்றனர்.

ஐக்கிய தேசிய தொழிலாளர் போராட்ட மத்திய அமைப்பின் பிரதிநிதிகள் விடுத்த வேண்டுகோளை அடுத்தே இந்தக் குழுவை ஜனாதிபதி நியமித்தார்.

ஜனாதிபதியைச் சந்திக்கச்

(6 ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்
12—07—1989
ஆனி — 28 புதன்கிழமை
நக்ஷத்திரம்: சுவாதி
சுபநேரம்:
04.29 முதல் 05.59 வரை
ராகுகாலம்:
11.59 முதல் 01.29 வரை
நவமி முன்னிரவு 8-36 வரை

ஞானக்கதிர்
அன்பு-அறநெறி-ஆன்மீகம்

இந்துசமய மாத மஞ்சரி
இரண்டாவது இதழ் வெளிவந்துவிட்டது!

★ திருமுறை பாடக் கேட்டுத் திளைத்த யோகர்
★ மகாத்மாவை மிஞ்சியவர் திருநீலகண்டர்
★ நினைப்பவர் மனமே கோயில்
★ நல்ல நாடு எது?
★ பிறந்தநாள் விழா பற்றிய சமயக் கண்ணோட்டம்
★ உயிர் வளர்க்கும் மூவாயிரந்தமிழ்
★ வேதத்தில் பொதிந்த விஞ்ஞானம்
★ ஓர் அடி வைத்தால் பத்தடி வைக்கும் இறைவன்

மற்றும் கருத்தாழம் மிக்க கட்டுரைகள், சமயச் சிறுகதைகள், கவிதைகள் மிளிர ஒளிவீசுகிறது ஞானக்கதிர்!

ஆதிபராசக்தியின் பலவர்ண முகப்புப் படத்துடன் விற்பனையாகிறது !!

சமய அறிவைப் பெருக்க ஞானக்கதிர் படியுங்கள்!!!

உதயன் — சஞ்சீவி விற்பனை முகவர்களிடம் கேட்டு வாங்குங்கள். விலை: ரூ. 5/-

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கொடிகாமம்பருத்தித்துறை வீதியில் வீடு கட்டக்கூடிய மின்சார வசதியுடன் 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S. E. தம்பையா, இல. 15 சென் பீற்றேஸ் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (11509)

பாவித்த அலுமாரிகள், மேசைகள், கட்டில்கள், குஷன் செட் கதிரைகள், சிசில் குளிர் பெட்டி R - 60. 18'' National கலர் T. V. Wrights Iron Safe (English Make), மற்றும் வேறு சகல வீட்டுத் தளபாடங்களும் உடனடியாக விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 41, 4 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (1081)

பாவித்த அலுமாரிகள் உட்பட வீட்டுத் தளபாடங்களும் சகல மின்சார உபகரணங்கள், Bicycle, Ty. writer, T. V. மற்றும் பல விற்பனைக்கு உண்டு. தினமும் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை பார்வையிடலாம். SUBEICA, 343, பருத்தித்துறை வீதி, அரசடி, நல்லூர். (11497)

புதிய டீ-பிறிசர்கள் விற்பனைக்கு உண்டு. அளவு 4,5,6 அடி நீளம் கொண்டது. தொடர்பு: No 95, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். [11498]

17½ தும்புக் கயிறு இணைப்படகு (சீநோர் தயாரிப்பு) வெளி இணைப்பு யந்திரம் வலைகள் எல்லாம் செற்றாக விற்பனைக்கு உண்டு. ஐயனார் கோயிலடி, வியாவில் காரைநகர். (1 67

புதிய ஷோக்கேஸ் (Show case) ஒரு பாவித்த டீப்பிறீசர் (Deepfreezer) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 237, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (1065)

கிளிநொச்சியில் கரடிப்போக்குச் சந்திக்கருகில் ''பராசக்தி'' தியேட்டரும் அதன் பின்னால் உள்ள வீடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு; திருமதி ந. புவனேஸ்வரி, ஊரெழு கிழக்கு, சுன்னாகம். (.1446)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Hyline வெள்ளை, சுறுப்பு பேட்டுக் குஞ்சுகள் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும், Golden Comet, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் 12 ஆம் திகதி புதன்கிழமையும், Hybro புறொயிலர் குஞ்சுகள் 13 ஆம் திகதி வியாழக்கிழமையும் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில். [1080]

### கோழிக் குஞ்சு விநியோகம் UPLANDS FARM

(Dekalb) பிறவுண் பேட்டுக் குஞ்சு, சேவல் குஞ்சு, (Cobb) புறொயிலர் குஞ்சு (12.07.89) புதன்கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அருகில்) (1064)

### ஆங்கிலப் புத்தகம்

அடிப்படையிலிருந்து G.C.E. (O/L) வரை எழுத்து இலக்கணம், பேச்சுப் பயிற்சி முதலியவற்றை உள்ளடக்கிய மிகச் சிறந்த ஆங்கிலப் புத்தகம் Basic Grammar and Spoken Practical கேட்டு வாங்குங்கள்! பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (11477)

### Nallur Farm Centre

Nallur Farm Centre Prima Lohmann வெள்ளை, சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் Prima Broiler குஞ்சுகள் சிவப்பு சேவற்குஞ்சுகள் Golden Comet Hyline பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய், புதன் கிழமைகளில் பெற்றுக் கொள்ளலாம். C/o நல்லூர் வீடியோசென்ரர், 19 முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி-3006)

### தேவை

யாழ்நகரில் சமூக சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனத்திற்கு நகருக்கு அண்மையாக பெரிய வீடு வாடகைக்கு அல்லது விலைக்கு தேவைப்படுகின்றது. வெறும் காணி விற்பனைக்கு இருப்பினும் வாங்கப்படும். 561, C/o உதயன், யாழ்ப்பாணம். (1082)

### வாடகைக்கு

ஒரு Annex வீடு உட்பட தனியாக ஓர் அறையும் 5ஆம் குறுக்குத் தெருவில்வாடகைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: 38/1, 5ஆம்குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் [11502]

### வெற்றிடம் கல்வி


நல்லூரில் கீழ் வகுப்புப் பிள்ளைகள் இருவருக்குத் தமிழ் கணிதம், சுற்றாடற் கல்வி ஆகிய பாடங்கள் படிப்பிக்கக் கூடியவர்கள் [பெண்கள்] தகைமைச் சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும். 212/1, கோவில் வீதி, நல்லூர். (சீ/2902)

உ
சிவமயம்

## அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பிதழ்

அன்புடையீர்!

கடந்த 15-06-1989 இல் இறைபதம் நோக்கிய எங்கள் இல்லத் தலைவனும், தந்தையுமாகிய



### திரு. பொன்னையா இராசரத்தினம் (இராசு) அவர்களின்

அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 13-07-1989 வியாழக்கிழமை கண்ணகை அம்மன் கோயிலடி தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்தியம் 15-07-1989 சனிக்கிழமை புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தில் அமைந்த அவரது இல்லத்திலும் நடைபெறும். அவ்வமயம் தாங்கள் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளில் எம்முடன் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரர்.

புங்குடுதீவு - 3.

(11515)

## கூறு விலைகள்

### பிரதேசக் கல்வித் திணைக்களம், நல்லூர், யாழ்ப்பாணம்.

### யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கு உருக்கு அலுமாரிகளை (கபேட்) 72 x 36 x 18 வழங்குவதும் விநியோகித்தலும்

01. உருக்கு அலுமாரிகளை (கபேட்) 72 x 36 x 18 யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்திற்கு வழங்குவதற்கும் விநியோகிப்பதற்குமான முத்திரையிடப்பட்ட கூறுவிலைகள் விநியோகிப்பதற்குமான முத்திரையிடப்பட்ட கூறுவிலைகள் 1989 ஜூலை 16 ஆம் திகதி காலை 10. 00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

02. சிறிய உருக்கு அலுமாரிகளை வழங்குமாறு உறுதியான கட்டளை கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து இரண்டு மாதத்திற்குள் அவற்றை வழங்கமுடியுமானால் மட்டுமே கூறுவிலைகளை அனுப்புதல் வேண்டும். அலுமாரிகள் உற்பத்தி செய்த இடம் அளவு, வர்த்தக அடையாளம் என்பன விரிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். அவற்றின் விவரணப் படமேதுமுண்டாயின் அதனையும் இணைத்தல் வேண்டும். குறிப்பிடப்படும் கூறு விலையானது கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தேர்தற்தொகுதிகளில் அமைந்துள்ள அவ்வப் பாடசாலைகளுக்கு விநியோகிப்பதற்கானதாக இருத்தல் வேண்டும்.

### தேர்தற்றொகுதி

1. உடுப்பிட்டி
2. பருத்தித்துறை
3. காங்கேசன்துறை
4. கோப்பாய்
5. யாழ்ப்பாணம்
6. நல்லூர்
7. வட்டுக்கோட்டை
8. சாவகச்சேரி
9. ஊர்காவற்றுறை

03. குறிப்பிட்ட கூறுவிலை 1989 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை செல்லுபடியானதாகவிருத்தல் வேண்டும்: எச் சூழ்நிலையிலும் மாற்றப்படுதலாகாது.

04. கூறுவிலைகள் இணைப்படிகளிற் தயாரிக்கப்பெற்று முத்திரையிட்டனுப்பப்படவேண்டும். கூறுவிலைகள் வைத்து அனுப்பப்படும் கடித உறையின் இடதுபுற மேல் மூலையில் ''யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களத்திற்குச் சிறிய உருக்கு அலுமாரிகளை (கபேட்) வழங்குவதற்கும், விநியோகிப்பதற்குமான கூறுவிலைகள்'' என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும். கூறுவிலைகளை முடிவு காலத்திற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக இந்த அலுவலகத்திலுள்ள கேள்விப் பத்திரப் பெட்டிக்குள்ளிட வேண்டும் அல்லது பதிவு அஞ்சலில் அனுப்புதல் வேண்டும்.

05. கூறுவிலைகளை முழுதாக ஏற்றுக்கொள்ளும் அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது அதனை நிராகரிக்கும் உரிமை யாழ்ப்பாணப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் தன்மாட்டுக் கொண்டுள்ளார். தெரிவு செய்யப்பட்ட கூறுவிலையைச் சமர்ப்பித்தவர் விதிக்கப்பட்டுள்ள காலத்துக்குள் தாம் குறிப்பிட்ட விதப்படி கூறுவிலை சிறிய உருக்கு அலுமாரிகளை வழங்கத் தவறின், அவர் ஒப்பந்த நிபந்தனைகளை மீறியவராகக் கருதப்படுவதோடு, அவரைத் ''தவறிய ஒப்பந்தக்காரர்'' என அறிவிப்பதற்குரிய நடவடிக்கையும் எடுக்கப்படும்.

தங்கள் உண்மையுள்ள
யாழ்ப்பாணப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்.

(சி/3038)

## ஓராண்டு நினைவு அஞ்சலி



அமரர்
### திரு. தம்பிப்பிள்ளை செல்வரட்ணம்
(முன்னாள் இளைப்பாறிய அரசாங்க ஊழியர்)

மலர்வு: 28 - 10 - 1936
உதிர்வு: 12 - 07 - 1988

திதி: 22 - 06 - 1989


அன்பாய் பண்பாய் பாசமாய் எம்முடன் இருந்து திடீரென எம்மை விட்டுப்பிரிந்த அன்பின் தீபமே! ஆண்டு ஒன்றானாலும் உங்கள் நினைவு எங்கள் உள்ளங்களை விட்டு அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய தினமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமகன், பேத்தி

கொக்குவில் கிழக்கு,
[illegible]

(1185)

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
### தொம்மைப்பிள்ளை விக்ரர் இமானுவல்

மண்ணில்: 04 - 04 - 1963
விண்ணில் 12 - 04 1989

அன்புடனும் பாசத்துடனும் இன்சொல்லுடனும் வாழ்ந்து எல்லோருக்கும் இன்முகம் காட்டி வியத்தகு செயற்பாடுகளினால் எம்மையெல்லாம் ஆட்கொண்டு பெருமை கொள்ள வைத்து முற்றிலும் எதிர்பாராத வகையில் புவியுடல் களைந்து எம்மை மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு விண்ணுடன் புகுந்து என்றும் எம் உள்ளத்தில் நிறைந்திருக்கும் பாசமிகு நண்பா ''விக்ரர்'' உன்முகங் காண இன்சொல் கேட்க உன்னுடன் உறவாட இப்புவியில் ... யாழில் ...... உன்பாச உள்ளங்கள் ஏங்கித் தவிக்குதையா! எம்மை ஆறுதல் படுத்துமையா! நீ புவியுடல் களைந்து இன்றுடன் 90 நாட்கள் நீங்கினாலும் நின் நீங்காத நினைவலைகள் எம் நெஞ்சமதில் நிழலாடிக் கொண்டே இருக்கும். உன் ஆத்மா சாந்தி பெற இறைவனிடத்தில் வேண்டுகின்றோம்.

உனது பிரிவால் துயருறும்:
யாழ். சர்வோதயத் தொண்டர்கள்.

(1183)

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும் திவச அழைப்பும்



### திரு. விநாயகசுந்தரம் நடராஜா
(ஓய்வு பெற்ற மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி)

தாயின் மடியில்: 19. 03. 1933
தாயக மண்ணில். 24. 06. 1988

திதி: 13. 07. 1989

விளையாட்டுத்துறையின் அதிகாரியானீர். ஆனால் விதியின் விளையாட்டில் தோற்றுவிட்டீர். ஊரார் பிள்ளைகளில் பாசத்தைப் பொழிந்தீர். உங்கள் பிள்ளைகளைத் தவிக்கவிட்டுச் சென்றுவிட்டீர். அன்பின் சிகரமாய், பாசத்தின் உறைவிடமாய், எங்கள்ஒளிவிளக்காய் அன்புமொழி பல பேசி எங்களை வழி நடத்திய எங்கள் அன்புத் தெய்வமே! எமது மனம் தாங்குதில்லையே! இருளாய் ஓராண்டு ஓடினவோ? ஆறுமோ எம் நெஞ்சம் எத்தனை ஆண்டு கடந்தாலும் எமது ஏக்கம் மறையாது என்றும் உங்கள் நினைவுதான். உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

13-07-1989 அன்று நடைபெறும் திவச வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி: லக்ஷ்மி நடராஜா,
பிள்ளைகள்: பிரியா, நித்யா, சத்யா,
அமெரிக்காவில் வசிக்கும் பிள்ளைகள்:
ரஜனி, சுந்தர், ஸ்ரீதர், சுதாகர்,
தந்தை, மாமி, சகோதரர்,
சகோதரிகள், மைத்துனர்கள், உற்றார்,
உறவினர் நண்பர்கள்.

தெணிலேன்,
நெடியகாடு,
வல்வெட்டித்துறை.

(1163)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

## கேள்வி அறிவித்தல் - 1989.

எமது 15 - 06 - 89 ஆந் திகதிய அறிவித்தலைத் தொடர்ந்து கீழ்க்காணும் இறைச்சிக்கடை, சருவாட்டுக்கடை ஆகியவற்றுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 21 - 07 - 89 ஆந் திகதி ந. ப. 12. 00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். குத்தகைக்கான காலம் 01 - 08 - 89 தொடக்கம் 31 - 12 - 89 வரையிலானதாகும். விண்ணப்பப்பத்திரங்கள் யாவும் குறிப்பிட்ட பிரதேசசபையின் விசேட ஆணையாளரினால் கேள்விப் பத்திரப் பணம், கேள்வி வைப்புப் பணம் ஆகியன செலுத்துவதன் பேரில் 19 - 07 - 89 ஆந் திகதி ந. ப. 12. 00 மணிவரை சபை அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும். ஏனைய விபரங்களையும் நிபந்தனைகளையும் அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

வலி-தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம். 10 - 07 - 89.

ஆ. மகாலிங்கம்
விசேட ஆணையாளர்,
வலி - தெற்கு பிரதேச சபை.

| | குத்தகையின் தன்மை | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்புப் பணம் | மதிப்பிடப்பட்ட பணம் |
|---|---|---|---|---|
| 1. | ஆட்டிறைச்சிக்கடை (சுன்னாகம் மீன்சந்தை) | 100/- | 500/- | 15,000/- |
| 2. | கருவாட்டுக்கடை இல. 3 | 25/- | 100/- | 500/- |
| 3. | ,, ,, 5 | 25/- | 100/- | 500/- |
| 4. | ,, ,, 7 | 25/- | 100/- | 500/- |

(C/[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேதமடைந்த

# யாழ். மாவட்ட ஆஸ்பத்திரிக் கட்டடங்களை திருத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 12
யாழ்ப்பாண மாவட்டத்தில் சேதமடைந்த ஆஸ்பத்திரிகளைத் திருத்துவதற்கு யாழ். கட்டடத் திணைக்களம் மதிப்பீடுகளைச் செய்து வருகிறது.

இந்த மதிப்பீடுகளில் இருந்து யாழ். போதனா வைத்தியசாலையைத் தவிர ஏனைய வைத்தியசாலைகளைத் திருத்துவதற்கு மட்டும் பத்து லட்சம் ரூபாவுக்கு மேல் தேவைப்படும் என்று அறிய வருகிறது.

தெல்லிப்பளை வைத்தியசாலையிலேயே கூடுதல் திருத்த வேலைகள் இருப்பதாக கட்டடத் திணைக்கள பொறியியலாளர் தெரிவித்தார்.

இதேவேளை அனைத்து வைத்தியசாலைகளும் ஓரளவு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன என்றும்—

கட்டடத் திணைக்களத்துக்கு திருத்த வேலை செய்வதற்கான அனுமதி கிடைத்ததும் வேலைகள் உடன் ஆரம்பிக்கப்படும் எனவும் — அவர் தெரிவித்தார்.

திருத்த வேலைகள் அனைத்தும் ஒப்பந்தகாரரிடமே கொடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-10)

## நீண்ட காலத்திற்கு பின் நாடக விழா

புதுக்குடியிருப்பு ஜூலை 12
புதுக்குடியிருப்பில் நீண்ட காலத்திற்குப் பின்பு நாடக விழா ஒன்று நடைபெற்றது.

காத்தவராயன் என்ற இந்த நாடகத்தை நவரட்ணம், அழகன் என்ற அண்ணாவிமார் கூட்டுச் சேர்ந்து நெறிப்படுத்தி அரங்கேற்றினர். (இ - 126)

## புத்தகக் கண்காட்சி

சுவாமி விவேகானந்தரின் 125 ஆவது ஆண்டு பிறந்த நாளை முன்னிட்டு ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிர ஆதரவில் ஸ்ரீ ராமகிருஷ்ண விவேகானந்த புத்தகக்கண்காட்சி எதிர்வரும் 21 ஆம் திகதி யாழ் - வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற இருக்கிறது.

யாழ் - பல்கலைக்கழக உபவேந்தர் அ. துரைராஜா மங்கள விளக்கேற்றிக் கண்காட்சியைத் திறந்து வைப்பார்.

கலைப்பீடாதிபதி பேராசிரியர் என். பாலகிருஷ்ணனும் இக்கண்காட்சியில் கலந்து கொள்வார். (இ - 3)

அமைதிப்படை விவகாரம்:

# இந்திய அரசின் நிலையை நாடாளுமன்றக் குழுவினர் ஆதரித்துத் தீர்மானம்

புதுடில்லி, ஜூலை 12
அமைதிப் படை விலகல் தொடர்பாக இந்திய அரசு தற்போது கடைப்பிடிக்கும் நிலைப்பாட்டை வெளிவிவகாரம் தொடர்பான இந்திய நாடாளுமன்ற ஆலோசனைக் குழு ஆதரித்துள்ளது.

இலங்கையிலிருந்து ஒருதலைப்பட்சமாக அமைதிப் படையை விலக்குவது என்ற பேச்சுக்கே இடமில்லை.

இலங்கை—இந்திய ஒப்பந்தத்தின் நடுநாயகமான அம்சங்கள் அமுல் நடத்தப்பட வேண்டும். அதிகாரப் பகிர்வு பயனுள்ள வகையில் வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கு ஓர் அரசாங்கத்தை அமைக்கக் கூடிய வகையில் அமுலாக்கப்பட வேண்டும்.

உள்நாட்டுப் பிரச்சினைகளை வைத்து இலங்கை ஜனாதிபதி அமைதிப் படை விலகல் குறித்து ஒருதலைப்பட்சமாக முடிவு எடுக்கமுடியாது.

இப்படி நாடாளுமன்ற ஆலோசனைக் குழு தீர்மானித்தது.

வெளியுறவு அமைச்சர் பி. வி. நரசிம்மராவ் கூட்டத்திற்குத்தலைமைவகித்தார். (அ-எ)

## மருந்து தெளிக்கும் கருவிகள்

மானிப்பாய், ஜூலை 12
உடுவில் கமநல சேவை நிலையத்தில் மருந்து தெளிக்கும் கருவிகள் குறைந்த கட்டண வாடகையில் வழங்கப்பட்டு வருகின்றன.

விவசாயிகள் குறைந்த கட்டணத்தில் இவற்றை வாடகைக்கு பெற்று விவசாய தேவைகளுக்கு பயன்படுத்துமாறு உடுவில் கமநல சேவை பெரும்பாக உத்தியோகத்தர் திரு. க. மகாதேவராசா தெரிவித்துள்ளார். [ச-90]

★ தாதிமாருக்கு

# உணர்வு இழக்கச் செய்யும் முறை குறித்துப் பயிற்சி

கொழும்பு, ஜூலை 12
சிறிய சத்திர சிகிச்சைகளின் போது நோயாளர்களை உணர்விழக்கச் செய்யும் முறைகள் குறித்து தாதிமாருக்குப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

அமைச்சர் ரேணுகா ஹேரத் இதற்கான முடிவை எடுத்திருக்கிறார்.

தற்சமயம் ஆஸ்பத்திரிகளில் உணர்விழக்கச் செய்யும் டாக்டர்களுக்கு பற்றாக்குறை நிலவுகிறது.

இதனால் இதற்கான பயிற்சியைத் தாதிமாருக்கும் வழங்கும்படி அரசசேவை ஐக்கிய தாதிமார் சங்கம் அரசாங்கத்திடம் கோரியிருந்தது. (இ-எ)

ஜி. சி. ஈ. விடைத்தாள்கள்:

# பெறுபேறுகள் அனைத்தும் கிடைத்த பின்பே மீளாய்வு

ஜி. சி. ஈ. சாதாரண தர பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் அனைத்தும் அவர்களுக்குக் கிடைத்த பின்னரே பரீட்சை விடைத்தாள்களை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படும் என்று பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்ல தெரிவித்தார். (இ-எ)

# அரசின் சொத்துக்கள் பொது மக்களுக்குரியவை

அரசாங்க சொத்துக்கள் பொதுமக்களுக் குரியவையாகும் அவை அரச அதிகாரிகளின் சொந்தத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுவது தவிர்க்கப்பட வேண்டும்.

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் நிர்வாக உத்தியோகத்தர் திரு. ஏ.சி இராசதுரை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அலுவலகத்திற்குரிய தண்ணீர் பௌசரையும், உழவு இயந்திரத்தையும் வழங்கும் வைபவத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சிவரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில்:

''நெருக்கடியான நிலையில் எமது பிரதேசம் பாதிக்கப்பட்டிருக்கும்போது அரசின் உதவிகளும் எமக்கு சிறுகச் சிறுகக் கிடைத்து வருகின்றன. அவ்வாறு கிடைப்பவற்றை நாம் நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். குறிப்பாக வசதியற்ற மக்களின் தேவைகளுக்காக வழங்கப்படுகின்ற தண்ணீர் பௌசர்கள் சரியான முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். அப்போது தான் எமது சேவையின் முக்கியத்துவம் உணரப்படும் என்றார். (இ-16)

## நெடுந்தீவில் மரம் தறிப்பு

நெடுந்தீவு ஜூலை 12
மரங்களைத் தறித்து வெளியிடங்களுக்கு ஏற்றுமதி செய்யும் நடவடிக்கை நெடுந்தீவில் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. இதனால் நெடுந்தீவு ஒருகாலத்தில் மற்றும் ஒரு கச்சதீவாக மாறிவிடுமோ என்ற ஐயம் நிலவுகிறது.

நெடுந்தீவில்இருந்து மரங்களை வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்வது முற்றாகத் தடை செய்யப்பட வேண்டும் என்பதில் பொதுத் தாபனங்கள் ஒரே கருத்தைக் கொண்டிருந்தபோதிலும் துறைமுகத்தில் பெருந்தொகையான தறிக்கப்பட்ட மரக்குற்றிகள் ஏற்றுமதிக்காகக் குவிக்கப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. (இ-111

## வீதிக்கு வீதி மீன் வியாபாரம்

வடமராட்சி, ஜூலை 12
நெல்லியடி, கரவெட்டிப் பகுதிகளில் வீதிக்கு வீதி மீன் வியாபாரம் நடைபெற்றுவருகிறது.

நகரப் பகுதிகளில் அடிக்கடி அசம்பாவிதங்கள் இடம்பெற்று வருவதாலேயே வீதிக்கு வீதி வியாபாரம் ஆரம்பமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ.160)

## நுணாவிலில் கொள்ளை

நுணாவில் மேற்கில் ஒரு வீட்டில் புகுந்த ஆயுதம் தாங்கிய கொள்ளையர்கள் இருபத்தையாயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைக் கொள்ளையிட்டனர். (ஒ-117)

## வீதி வெளிச்சம் இல்லை என புகார்

யாழ்ப்பாணம், ஜூலை 12
மருதனாமடம் தொடக்கம் இணுவில் துரை வீதிவரை உள்ள பிரதான வீதியில் இரவு நேரங்களில் வீதி வெளிச்சம் இல்லாததால் மக்கள் பெரிதும் கஷ்டம்அடைகின்றனர் என்று புகார் கூறப்படுகிறது. (இ-3)

## இருவர் விடுதலை

ஒட்டுசுட்டான், ஜூலை 12
கடந்த 11 மாத காலமாக தடுத்துவைக்கப்பட்டிருந்த இருவர் வவுனியா முகாமிலிருந்து விடுதலை செய்யப்பட்டனர்.

ம. ரவிச்சந்திரன், வே. மோகனதாஸ் ஆகியோரே விடுதலை செய்யப்பட்ட இருவரும் ஆவர்.

இவர்கள் கடந்த ஆகஸ்ட் மாதத்தில் கற்சிலைமடுப் பகுதி சுற்றிவளைப்பின் போது கைதானவர்கள் என்று கூறப்பட்டது. (ஒ-113)

★ முதலாவது ★
பிறந்தநாள் வாழ்த்து




★ செல்வி அனுஷியா ★

புங்குடுதீவு 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மார்க்கண்டு இராஜேஸ்வரி தம்பதிகளின் செல்வப் புதல்வி அனுஷியா (12 - 7 - 89) இன்று தனது முதலாவது பிறந்தநாளை மேற்கு ஜேர்மனியிலுள்ள HUMBURG என்னுமிடத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரைஅம்மா, அப்பா, அப்பப்பா, அப்பம்மா, மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியன்ரிமார், சித்தப்பா, மச்சான்மார், மச்சாள்மார், அண்ணன்மார், அக்காமார் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் இறைவன் அருளால் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள். (1174)

நாஷனல்
சிப்பிங் அன்ட் ரவல்ஸ்

பதினெட்டு வயதுக்கு மேற்பட்டோர்

★ ஜேர்மனி ★ இத்தாலி
★ பிரான்ஸ் ★ சுவிஸ்

ஆகிய இடங்களுக்குச் செல்வதற்கு
வாரம் ஒரு பயண ஏற்பாடு

விபரங்களுக்கு:

NATIONAL
SHIPPING AND TRAVEL

New Lalitha Building,
185/2, Kasthuriar Road,
JAFFNA.

(C/2961)




அன்டன்—
முதன் முதலில் மழை நீர்ப் பீலிகளில் நெளிவு ஏற்படாவண்ணம் அல்ட்ரு வயலட் ஸ்டபிலைஸரால் தயாரித்தது.

அன்டன்
முதன் முதலில் பவுடர் சேர்ந்த சன்னங்களைக் கொண்ட பீவீசி கொம்பவுண்டைத் தயாரித்தது.

அன்டன்
பூரணமான தண்ணீர் குழாய் பரிசோதனை வசதிகளை முதன் முதலில் ஏற்படுத்தியது.

அன்டன்
வீடு கட்டுபவர்கள் 40 சத வீதம் மீதப்படுத்தும் வகையில் தண்ணீர் குழாய்களை 1983ம் ஆண்டின் 147 வது எஸ் எல் எஸ் தராதரத்துக்கமைய மூன்று சுவர்க் கனங்களில் முதன்முதலில் தயாரித்தது.

அன்டன்
80 வெவ்வேறு அளவுகளில் ஒன்றிணைப்புகளில் நீர் ஒழுகாது பொருந்தும் வண்ணம் நுட்ப இஞ்ஜெக்ஷன் வார்ப்புகளை முதன் முதலில் தயாரித்தது.

அன்டன்
இஞ்ஜெக்ஷன் வார்ப்பு முறையில் வடிகால் சாக்கடை நீர் செல்லும் குழாய்ப் பொருத்துகளை முதன் முதலில் உற்பத்தி செய்தது.

சந்தைப்படுத்துவோர்:-

சென்ற் அன்தனீஸ் இன்டஸ்ட்ரீஸ் குழு

512, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10. தொலைபெசி: 20622-4.

விநியோகிப்போர்

யாழ்ப்பாணத்தில்
அன்டன் விற்பனையாளர்
சிரிசன்ஸ்,
19, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 22568

கல்முனையில்
அன்டன் விற்பனையாளர்,
கொழும்பு ட்றெப்பரி ஸ்ரோஸ்,
24, பிரதான வீதி,
கல்முனை.
தொலைபேசி: 067 2154.

ANTON

முழுமைச் சேவையின் முன்னோடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரயாண ஒழுங்குகள்

● சவூதி அரேபியா ● மாலைதீவு

பிரயாணம்

## மாலை தீவு (பெண்கள் மட்டும்)

| | | |
|---|---|---|
| Lady Doctor | 1 இடம் | |
| Tailors & Cutters | 35 " | 85 U.S.D. |
| Helpers & Ironers | 35 " | 70 U.S.D. |

மேற்கூறிய வெற்றிடங்களுக்கு உடனடிப் பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

## சவூதி அரேபியா

| | | |
|---|---|---|
| Plumber | 4 இடம் | 450 S.R. |
| Elevator Technician (Lift திருத்துபவர்) | 1 " | 750 S.R. |
| Electrical Engineer | 4 " | 1800 S.R. |
| Health Maintenance-Supervisor (P. H. I. OR Hospital Overseers) | 1 " | 1100 S.R. |
| Cleaners | | 400 S.R. |
| Tin Smith | 1 " | 700 S.R. |
| A C Mechanic Helper | 4 " | 450 S.R. |

மேற்கூறிய வெற்றிடங்களுக்கு கடவுச்சீட்டு 10 படங்கள், அனுபவ சான்றிதழ்களுடனும் உடன் தொடர்பு கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| Mechanical Engineer | 2 இடம் | 1700 S.R. |
| Street Light Electrician | 3 " | 800 S.R. |
| Traffic Light Technician | 2 " | 1000 S R. |
| Gardener Cum Plumber | 1 " | 500 S.R. |

இவற்றிற்கு நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

# 'M' THREE TRAVEL

தலைமையலுவலகம்:
'இந்திரபவனம்'
சோதி வீதி,
காங்கேசன்துறை.

கிளையலுவலகம்:
இல: 1, 2ஆவது ஒழுங்கை,
மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-3037]


# மலைநாட்டில் போக்குவரத்தும் வங்கிச் சேவைகளும் சீர்குலைவு

நுவரெலியா, ஜூலை 12

அட்டன் தலவாக்கொல்லை நுவரெலியாப் பகுதிகளில் தனியார் வாகனங்கள் ஓடக் கூடாது என விடுக்கப்பட்ட எச்சரிக்கையை அடுத்து சகல தனியார் வாகனங்களும் நிறுத்தப்பட்டு விட்டன.

அரசாங்க - கூட்டுத்தாபன - கச்சேரி வேலைகள் சீராக நடைபெறவில்லை.

எச்சரிக்கைக் கடிதம் காரணமாக நுவரெலியா மாவட்ட நீதிமன்றம் மூடப்பட்டுள்ளது.

ஊழியர்கள் சமூகமளிக்காத காரணத்தால் அரசாங்க வங்கிகள் தினமும் இருமணி நேரம் மட்டுமே திறக்கப்படுகின்றன.

இருமணி நேர கொடுக்கல் வாங்கலும் பலத்த சிரமத்தின் மத்தியில் நடத்தப்படுவதாக வங்கி அதிகாரிகள் தெரிவித்தனர்.

பெற்றோல் விற்பனை நிலையங்கள் 10 நாட்களுக்கு மூடப்பட வேண்டும் என்ற எச்சரிக்கையை அடுத்து அட்டன் தலவாக்கொல்லையில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையங்கள் மூடப்பட்டன.

தனியார் போக்குவரத்து வாகனங்கள் நிறுத்தப்பட்டுள்ளதால் அட்டன் - தலவாக்கொல்லை - நுவரெலியா - டயகம - மஸ்கெலியா - பொகவந்தலாவ ஆகிய பகுதிகளுக்கான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளது.

இராணுவத்தினர் சில இ. போ. ச. பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்தி உள்ளனர்.

நுவரெலியாவில் ஹக்கல பூங்காவனப்பகுதியில் இராணுவத்தினர் செலுத்திய இ. போ. ச. பஸ் ஒன்றைத் தாக்கியவர்கள் மூன்று இராணுவ வீரர்களைச் சுட்டுக் கொன்றுள்ளார்கள். (ச-58)

## கணனி முறைகள் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூலை 12

ஐக்கிய அமெரிக்காவில் உள்ள ரெக்சஸ் என். இ. சி. சுப்பர் கொம்பியூட்டேஸ் நிறுவனத்தைச் சேர்ந்த கலாநிதி பரேஷ் 'கணனி முறைகள்' பற்றி இன்று புதன்கிழமை மாலை 3 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கனகசபாபதி மண்டபத்தில் உரையாற்றுவார். (ச)

# விளையாட்டுப் போதனாசிரியர்

பாடசாலைகளில் 300 விளையாட்டுப் போதனாசிரியர்களை நியமிக்க கல்வி அமைச்சர் லொக்கு பண்டார நடவடிக்கை எடுத்துள்ளார்.

இவர்கள் வசதி குறைந்த பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளிலே நியமிக்கப்படுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

விளையாட்டுப் போதனாசிரியர்களை நியமிக்க கல்வி அமைச்சு 2 ஆயிரத்து 300 பேரிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்றது.

இவர்களில் ஆயிரத்து 300 பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட பின்னர் இரண்டாவது நேர்முகப்பரீட்சைக்கு 533 பேர் மட்டுமே தகுதியுடையோராக இருக்கின்றனர்.

இவர்களின் பெயர்ப்பட்டியல்களை அமைச்சு தயாரித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியினால் நேர்முகப் பரீட்சை நடத்துவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாம். (இ-எ)

Past Pupils' Association
J/Uduppiddy American Mission College

## Annual General Meeting

Date — 16 - 07 - 1989 (Sunday)
Venue — School Premises
Time — 9. 30 a. m.

All are Welcome.

— PRINCIPAL.

(11486)

## மூன்றும் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
நாகரத்தினம்
சிவராஜா

மலர்வு: 24- 07- 1932
உதிர்வு: 15- 07- 1986
திதி: 12- 07- 1989

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய், பாசத்தின் உறைவிடமாய் எம்மை எல்லாம் வழி நடத்திய அன்புத் தெய்வமே! எங்கள் அனைவரையும்மீளாத் துயரில் ஆழ்த்தி விட்டுச் சென்றீர்கள். நாட்கள் 1095 தான் கடந்தாலும் உங்கள் நினைவு என்றென்றும் எங்கள் இதயத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கும். உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை தாழ் பணிந்து வேண்டுகின்றோம்.

என்றும் உங்கள்பிரிவால் துயருறும்;

கணவர், பிள்ளைகள், மருமக்கள்,பேரப்பிள்ளைகள்

''ஈஸ்வரி வாசா''
நவாலியூர்.

(991)

## 90ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி கிரியை அழைப்பும்



செல்வன் இராசதுரை இராஜநேசன்
(பாப்பா)
(றேடியோ மெக்கானிக் - தாவடி)

மலர்வு: 12 - 12 - 1967
உதிர்வு: 04 - 05 - 1989

எங்கள் குடும்பக் குலவிளக்காய், திருவுருவாய், அன்புச்சுடராய், அன்பின் பிறப்பிடமாய் வாழ்ந்த அன்புத் தெய்வமே! எம்மை ஆறுத்துயரில் ஆழ்த்தி விட்ட செல்வமே! உமது ஆத்மா சாந்தி அடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

உனது பிரிவால் வாடும்:
தாய், தந்தை,
சகோதரர், உறவினர்.

மரணச்சடங்கில் கலந்து துக்கத்தில் பங்குகொண்ட நண்பர்கள், உற்றார், உறவினர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் 13 - 07 - 1989இல் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையில் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

(11508)

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



சா. ஹரிகரன்
(குட்டிக்கண்ணா)

தாயின் மடியில்: 21. 08. 1968
தாயக மடியில்: 12. 07. 1987

ஆண்டுகள் இரண்டு கழிந்திடினும்
ஆறவில்லை எங்கள் மனம்
ஓயவில்லை எங்கள் கண்ணீர்
ஆவி துடிக்குது கண்ணா!

உன்னை இழந்து துடிக்கும்:
அப்பா, அம்மா,
அன்புச் சகோதர, சகோதரிகள்.

மானிப்பாய் கிழக்கு,
மானிப்பாய்.

(1186)

## ஓர் ஆண்டு சிரார்த்த தின அழைப்பு



அமரர் செல்வி ம. மாலதி
(வரத்தலம் கற்பக விநாயகர் ஆதீனம், பன்னாலை, தெல்லிப்பளை.)

மலர்வு: 29. 12. 1963
உதிர்வு: 24. 06. 1988
திதி: ஆனி, பூர்வபட்ச தசமி (13-07-1989)

மாறாத அன்பினால் மகிழ வைத்த எம் தெய்வமே!
தீராத துயர் தன்னில் துவள வைத்து எங்கு சென்றாய்?
ஈராறு மாதமாய் உமை நினைந்து வாடும் நாம்
உங்கள் பாதாரவிந்தமதில் எமது அஞ்சலியைச்
செலுத்துகின்றோம்.

பன்னாலை - வரத்தலம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆதீன பதியில் பிறந்து வாழ்ந்தவராகிய செல்வி மாலதி மகேஸ்வரசர்மா அவர்கள் அமரத்துவம் அடைந்தமை குறித்த ஓர் ஆண்டு சிரார்த்தக் கிரியைகள் 13.7.89 வியாழக்கிழமை நாளை பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அவ்வமயம் எமது உறவினர்களையும் பெரியோர்களையும், ஊர் அன்பர்களையும் மேற்படி கிரியைகளிலும் மதிய போசனத்திலும் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு ஸ்ரீ கற்பக விநாயகரின் நல்லாசியுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இங்ஙனம்,
குடும்பத்தினர்.

வரத்தலம் கற்பக விநாயகர் ஆதீனம்,
பன்னாலை, தெல்லிப்பளை.

(1181)

## 6 ஆவது ஆண்டு நினைவுதினம்



செல்வன் ஆ. சித்திரன் (சித்திரவடிவேல்)
நீர்வேலி.

உதயம்: 06 - 09 - 1963
அஸ்தமனம்: 12 - 07 - 1983

எம்மைப் பிரிந்து
ஆறு ஆண்டுகள் சென்றும் எங்களுக்கு என்றும் தெய்வமாக நின்று ஆறுதல் செய்து எங்கள் கவலையை நீக்கிவரும் உம்மை தெய்வமாக நினைத்து வணங்குகின்றோம்.

அன்பு அப்பா, அம்மா, அக்கா, தங்கை.

நீர்வேலி [illegible]

(11510)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



திரு. சின்னத்தம்பி சிவலோகசுந்தரம்
(இளைப்பாறிய உதவித் தபால் அத்தியட்சகர், காப்புறுதிக் கூட்டுத்தாபன புலனாய்வாளர்)

தோற்றம்: 15 - 06 - 1928
மறைவு: 12 - 06 - 1989

எங்கள் குலவிளக்கே! எமைப் புரந்த ஏந்தலே!
திங்களொன்று சென்றதை யாம் நம்புவதோ?
தங்கள் முகமெங்கள் முன்னே சிரிக்குதையா!
நங்கள் துயர் தீரவே நாடி நீயோடி வாராயோ!

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'நில்கந்தா'
மானிப்பாய்.

(1182)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

குறள்:
இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு.

பொருள்:
துன்பமானவற்றைச் செய்தவர்க்கும் இனிய உதவிகளைச் செய்யாவிட்டால், சான்றோரின் சால்பு என்ன பயன் உடையதாகும்?

உதயன்
இல. 361/1 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம் 23071
12 07 1989 த. பெ. இல. 23

# மாற்றுவழி மூலம் மருந்து; மறுப்பதன் மறைமுகம் என்ன?

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் 'பாண்டேஜ்' உட்பட மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு உண்டு. அதனால் நோயாளர்கள் தமது பகுதியில் உள்ள அரசாங்க ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறமுடியாத நோய்களுக்குச் சிகிச்சை பெற மட்டுமே யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரிக்கு வருமாறு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

இதே வேளை, வடபகுதிக்குத் தேவையான மருந்து வகைகளை விமான மூலம் தருவிப்பதற்கு எடுத்த முயற்சி பலனளிக்கவில்லை. கொழும்பில் உள்ள சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள், அதற்கு மறுப்புத் தெரிவித்து விட்டனர். வழமை போலவே, மருந்து வகைகளைக் கொழும்பிலிருந்து லொறிகளில் ஏற்றி வருமாறு கூறியிருக்கின்றனர்!

உணவிலேயே மருந்து சேர்த்து உடல் ஆரோக்கியத்துடன் வாழ்ந்தவன் தமிழன். அதாவது மருந்துத் தன்மை கொண்ட தாவரங்கள் மூலிகைகளை உணவாக்கி அதனால் நோய் நொடிகளைத் தூரத்தே வைத்திருந்தவர்கள் எமது மூதாதையர்கள்.

ஆனால் இப்போது நிலைமை வேறு. உணவு வேறு மருந்து வேறாகிவிட்ட நிலை. இப்போதைய உணவு வகைகளைச் சாப்பிடுவதாலேயே நோயாளியாகி மருந்து தேவைப்படும் கட்டாயம். இந்தப் புதிய நிலைப்பாட்டால், பழக்கமாற்றத்தினால் உணவுப் பொருள்களைவிட முக்கியமானவை; முதன்மையானவை என்ற இடத்தை மருந்துகள் பிடித்து விட்டன! உணவு இல்லாவேனும் ஒருவேளைப் பொழுதைப் போக்கினும் போக்கலாம்; ஆனால் மருந்தின்றி அது அசாத்தியம் என்ற தன்மை, இயல்பு உருவாகிவிட்டது.

அதனால்—

சாதாரண சூழ்நிலையில்கூட, மருந்து வகைகள் மிக மிக அத்தியாவசியப் பொருள்கள் வகுப்பில் சேர்ந்து விடுகின்றன. தமிழ்ப் பகுதிகளைப் பொறுத்த மட்டில் "ஆயுதப் பிரயோகக் கட்டம்" இன்னும் முழுமுக முடிந்ததாக இல்லை.

அதன் நிமித்தம் உணவுப் பொருள்களை விட மருந்து வகைகளை இப்பகுதியில் வேண்டிய அளவில் கையிருப்பில் வைத்திருத்தல் அவசியமாகிறது; அத்தியாவசியமாகிறது.

இதனைச் சற்றேனும் உணராதவர்களாக, கொழும்பில் உள்ள அதிகாரிகள், சிவப்பு நாடாவை இறுக்கிச் சுற்றுகிறார்கள். மனிதனின் உயிருடன், உடல் நலத்துடன் சம்பந்தப்பட்ட மருந்து வகைகள் விடயத்தில் மனிதாபிமானம் இல்லாமல் நடக்கிறார்கள். இது கண்டிக்கப்பட வேண்டியது.

கொழும்பில் அரச சேவைகள், பணிகள், அலுவல்கள் சீராக நடக்கவில்லை. அதனால் மருந்து வகைகளை அனுப்ப முடியவில்லை. என்று கூறியிருப்பினும்கூட நிலைமையை அனுசரித்து, கஷ்டத்தை உணர்ந்து அதனை ஏற்றுக் கொண்டிருக்கலாம்.

ஆனால் தெற்கிலே, தலைநகர் கொழும்பிலே வாகனப் போக்குவரத்து இல்லாமல் ஊழியர்கள் பயமுறுத்தப்பட்டு பாதுகாப்பில்லாத நிலையில் சேவைகள் சீரழிந்து போயிருக்கும் வேளையில்—

இங்கிருந்து லொறிகளை அனுப்பி மருந்து வகைகளைத் தருவிப்பதில் கஷ்டம், ஆபத்து இல்லை ... விதண்டாவாதப் போக்கைக் கடைப் பிடிப்பது சிறிதேனும் மனிதத் தன்மை இல்லாத கயமைச் செயலாகும்.

அத்தியாவசியமாகத் தேவைப்படுவது மருந்து. அதனை அவசரமாகக் கொண்டு வந்து சேர்க்க வழமையை விட ஒரு மாற்றுவழியைக் கண்டாக வேண்டும். விமான மூலம் கொண்டு வருவது மாற்றுவழிகளில் உகந்த, சாத்தியமான ஒன்று. நெருக்கடி தணியும் வரை அதனைச் செயற்படுத்துவதால் ஏற்படும் பணச் செலவைப் பார்க்க முடியாது.

பணத்தைவிட மக்கள் நலன் தான் முக்கியம். தமிழர்களுக்கு அந்தப் பொதுவிதி பொருந்தாது என்று கொழும்பு அதிகாரிகள் நினைப்பது ஏனோ? தமிழர்கள் இரண்டாம் தரப் பிரசைகள் என்பதை நிலைநாட்டுவதற்காகவா? இந்தக் கொடுமை ஒழிவது, ஒழிக்கப்படுவது எப்போது?

மருந்து வகைகளை மாற்றுவழி மூலம் அனுப்பி வைக்கத் தவறுவது தமிழர்களை அழித்தொழிக்க எடுக்கப்படும் மறைமுக நடவடிக்கைகளில் ஒன்றாகக் கருதப்படும்.

## இன்று திருநடனத் திருவிழா

காங்கேசன்துறை ஜூலை 12
பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தில் இன்று மாலை ஷண்முகப்பெருமானின் திரு நடனத் திருவிழா இடம் பெறும். இரவு பூந்தண்டிகை இடம் பெறும். (க-6ட)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூலை 12
மறவன்புலோ, கைதடி-நாவற்குழி கலையாடரணன் சோட்டை வீதி வள்ளியம்மன் கோவில் மஹாகும்பாபிஷேகம் நாளை 13 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறும். (க)

சமய சந்நிதிகளில்

## புனித அன்னாள் உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 12
பாண்டியன் தாழ்வு புனித அன்னாள் ஆலய வருடாந்த உற்சவம் இம் மாதம் 14 ஆம் திகதி ஆரம்பமாகி 23 ஆம் திகதி திருநாள் கூட்டுப் பலியுடன் முடிவடையும். தினமும் பிற்பகல் 5 மணி முதல் செபமாலையும் மறையுரையும் அதனைத்தொடர்ந்து திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படும். பங்குத் தந்தை அருட்திரு மேரி யோசப் அடிகளின் அனுசரணையுடன் அருட்திரு பிலிப் அடிகள் வழிபாடுகளை நடத்துவார் (இ)

## முன்னாள் சீனத் தலைவர்மீது குற்றச்சாட்டுகள்

பீக்கிங் ஜூலை 11
சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் தலைவர் சாவ் சியாங் அரசாங்கத்தைத் தூக்கி எறிவதற்கான சதி ஒன்றில் தொடர்பு கொண்டிருந்தார் என்று சீன அரசாங்கம் கடந்த 5ஆம் திகதி குற்றஞ் சாட்டியிருக்கிறது.

ஜனநாயகத்துக்கு ஆதரவான இயக்கத்தைப் பயன்படுத்தி சாவ் சியாங்கும் அவருடைய ஆலோசகர்களும் அரசியல் சூழ்ச்சிகளில் ஈடுபட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

சீன தேசிய மக்கள் காங்கிரஸில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை ஒன்றிலேயே இந்தக் குற்றச்சாட்டுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன (க)

## காடர் மரணம்

புடாபெஸ்ட், ஜூலை 11
ஹங்கேரியின் ஜனாதிபதியாக 32 ஆண்டுகள் பணிபுரிந்த திரு ஜேனஸ் காடர் காலமானார். அவருக்கு வயது 77.

கடந்த மே மாதம் இவர் ஹங்கேரி கம்யூனிஸ்ட் கட்சிப் பதவியில் இருந்து விலக்கப்பட்டார். (எ)

● இந்திய நாடாளுமன்றத் தேர்தல்:

# சோனியா காந்தி போட்டியிடாமல் தடை விதிக்குமாறு நீதிமன்றில் மனு

லக்னோ, ஜூலை 11
பிரதமர் ராஜீவ் காந்தியின் மனைவி சோனியா காந்தி வருகிற இந்திய பொதுத் தேர்தலில் போட்


சோனியா காந்தி

டியிடுவதைத் தடை செய்யும்படி கோரி அலஹபாத் மேல் நீதிமன்றத்தில் ரிட்மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

ராஷ்ட்ரீய கட்சியின் ஸ்தாபகர் மஹரிஷி சுவதேஷ் இந்த மனுவைத் தாக்கல் செய்திருக்கிறார்.

தேர்தல் ஆணைக்குழுவுக்கு இது சம்பந்தமாக உத்தரவிடும்படி மனுவில் கோரப்பட்டுள்ளது.

சோனியா, இத்தாலிபிரசையாக இருந்தவர். அவர் தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்னர் அவர் பற்றி உளவு அதிகாரிகள் விசாரணை நடத்த வேண்டும். அதன் பின்னரே தேர்தலில் போட்டியிட சோனியாவை அனுமதிக்க வேண்டும்—இப்படி மனுவில் மேலும் கூறப்பட்டுள்ளது.

பிரதமர்ராஜீவ் காந்திக்கு எதிராகவும் ரிட் மனுவை மகரிஷி அவிசேஷ் தாக்கல் செய்திருக்கிறார்.

நாட்டின் கௌரவத்தைக் காப்பாற்றக் கூடிய விதத்தில் பொறுப்புணர்ச்சியுடன் புத்திசாலித்தனமாகப் பேசும்படி நீதிமன்றம் பிரதமருக்கு உத்தரவிடவேண்டும் என்று மனுவில் கோரப்பட்டுள்ளது.

உள்துறை அமைச்சர் பூட்டாசிங்குக்கு எதிராக சமர்ப்பிக்கப் பட்ட ரிட் மனுவில்:-

பிரதமர் ராஜீவ், அவரது மனைவி சோனியா ஆகியவர்களைச் சந்திக்க அனுமதிக்கு முன்னர் அவர்களின் இத்தாலி மற்றும் வெளிநாட்டு உறவினர்கள் பற்றி புலன் விசாரணைப் பகுதியினர் பூரண விசாரணை நடத்தும்படி அமைச்சருக்கு நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.


ராஜீவ் காந்தி

பிரதமர், அவரது மனைவி ஆகியோரைச் சந்திக்கும் வெளிநாட்டவர் பற்றிய பட்டியல் ஒன்றைத் தயாரித்து வைத்திருக்கும்படியும் உள்துறை அமைச்சருக்கு நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்றும் மனுவில் கோரப்பட்டுள்ளது.

இம் மனுக்களை நீதிமன்றம் விசாரணைக்குஎடுத்துக் கொண்டுள்ளது. (எ)

## பொதுத் தேர்தலில் வெங்கடேஸ்வரன் போட்டி

திருவனந்தபுரம், ஜூலை 11
தமிழ் நாட்டில் இருந்து எதிர்க்கட்சி வேட்பாளராக இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடப் போவதாக முன்னாள் வெளியுறவுச் செயலாளர் ஏ. பி. வெங்கடேஸ்வரன் தெரிவித்தார்.

வருகிற பொதுத்தேர்தல் ராஜீவ் அரசின் ஊழல் நடவடிக்கைகளை மையமாக வைத்தே நடத்தப்படும்.

எப்படி வாக்களிப்பது என்பதை மக்கள் ஏற்கனவே தீர்மானித்து விட்டனர் என்பதை அறியக்கூடியதாக இருக்கிறது.

இப்படி திரு வெங்கடேஸ்வரன் சொன்னார். (எ)

## சுவாமிகள் தடுக்கப்பட்டனர்

கல்கத்தா, ஜூலை 11
கல்கத்தாவில் இராமகிருஷ்ணமிஷன் மருத்துவமனையில் சுமார் 100 ஊழியர்கள் மறியல் இயக்கம் ஒன்றை சனிக்கிழமை நடத்தினர்.

போனஸ் வழங்குவது சம்பந்தமான பேச்சுக்கள் தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து இந்த மறியலை ஊழியர் மேற்கொண்டனர்.

மிஷன் செயலாளர் சுவாமி ஜயதேவானந்தா உட்பட ஏழு சுவாமிகள் மருத்துவமனையை விட்டு வெளியேறாதபடி 5 மணித்தியாலங்களாக தடுக்கப்பட்டனர். (எ)

## ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தம்

காபூல், ஜூலை 11
ஹஜ்பெருநாளை முன்னிட்டு காபூல் அரசு ஒருதலைப்பட்சமாக யுத்த நிறுத்தம் ஒன்றை நேற்று அறிவித்தது.

இதனிடையில் காபூல் நகர் மீது கெரில்லாக்கள் ரொக்கட் தாக்குதல் நடத்தியதில் 10 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 50 க்கு அதிகமானோர் காயமடைந்தனர். (எ)

## அஸாமில் வெள்ளம்

கௌஹாத்தி, ஜூலை 11
அஸாம் மாநிலத்தில் பெரு வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

500 கிராமங்கள் தண்ணீரில் மூழ்கி விட்டன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# மெக்காவில் இரண்டு குண்டுகள் வெடித்து இருவர் பலி!

ரியாத், ஜூலை 11
சவூதி அரேபியாவின் புனித தலமான மெக்காவில் நேற்று இரண்டு குண்டுகள் வெடித்தன. அப்போது இருவர் மரணமடைந்தனர்

ஹஜ் பெருநாளை ஒட்டி லட்சக்கணக்கானயாத்ரீகர்கள் மெக்காவில் திரண்டுள்ளனர்.

பள்ளிவாசல் ஒன்றின் அருகில் ஒரு குண்டுவெடித்தது. இரண்டாவது குண்டு பாலம் ஒன்றின் அருகில் வெடித்தது.

இந்தக் கிரிமினல் செயல் சம்பந்தமாக தீவிர விசாரணைக்கு சவூதி அரசு உத்தரவிட்டுள்ளது.

மக்கா வரும் யாத்ரீகர்கள் குறித்து அரசு பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தீவிரப் படுத்தியிருக்கிறது.

ஒவ்வொருவரையும் படையினர் சரீர பரிசோதனைக்கு உட்படுத்துகின்றனர்.

மெக்காவில் அரசியல் ஊர்வலங்களை நடத்த ரியாத் அரசு தடைவிதித்துள்ளது. இத்தடையை மீறும்படி ஈரான் யாத்ரீகர்களுக்குதெஹ்ரான் அரசு உத்தரவிட்டிருக்கிறது. இவ்வாண்டு 45 ஆயிரம் ஈரான் யாத்திரீகர்களை மட்டுமே அனுமதிப்பதுஎன்று சவூதி அரசு முடிவு செய்தது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் மெக்காவில்ஏற்பட்ட கலவரம் ஒன்றில் சுமார் 400 ஈரானிய யாத்ரீகர்கள் மரணமானார்கள் என்பது தெரிந்ததே. (எ)

# பெனஸிர் தங்கிய ஹோட்டல் அறையில் ஒற்றுக் கேட்கும் கருவி

லண்டன் ஜூலை 11
லண்டனில் பாகிஸ்தான் பிரதமர் பெனஸிர் பூட்டோ தங்கியிருந்த ஹோட்டல் அறையில் ஒற்றுக் கேட்கும் சாதனங்கள் பொருத்தப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டதாக லண்டன் பத்திரிகை செய்தி வெளியிட்டது.

'நியூஸ் ஒப்த வேர்ல்ட்' என்ற இந்தப்பத்திரிகை இதனை முற்பக்கச் செய்தியாக வெளியிட்டது.

றிட்ஸ் ஹோட்டலில் பெனஸிர் தங்கியிருந்த அறையில் பொருத்தி வைக்கப்பட்ட ஒற்றுக்கேட்கும் சாதனத்தை ஸ்கொட்லந்து யார்ட் பொலீஸார் அகற்றினர் என்றும் இது பற்றி உயர் மட்ட விசாரணை நடத்தப்படுவதாகவும் அச் செய்தியில் கூறப்பட்டிருந்தது.

இந்த அறையை பல உலக நாடுகளின் தலைவர்கள் மற்றும் பிரமுகர்கள் பாவித்துள்ளனர்.

அவர்களின் பேச்சுக்கள் மற்றும் விஷயங்களும் இது போன்று ஒற்றுக் கேட்கப்பட்டிருக்கலாம் என்று அச்சம் தெரிவிக்கப் படுகின்றது

கண்டுபிடிக்கப்பட்டது சாதாரண மின் உபகரணமே" என்று மட்டும் ஹோட்டல் பேச்சாளர் சொன்னார்.

ஒருவார கால பிரிட்டிஷ் விஜயத்தை மேற்கொண்டு பெனஸிர் கடந்த 5 ஆம் திகதி லண்டன் சென்றார். (எ)

# தமிழக அரசியலில் நடிகை தீபா தாய் மீது பொலீஸில் முறையீடு

சென்னை, ஜூலை 11
நடிகை தீபா, இந்திரா காங்கிரஸில் முக்கிய பிரமுகராக இருக்கிறார்.

200க்கு அதிகமான படங்களில் நடித்தவர் இவர்.

காங்கிரஸில் இருந்து விலகும்படி தனது பெற்றோர் மற்றும் சகோதரர்கள் பயமுறுத்தி வருகிறார்கள் என்று தீபா பொலீஸில் முறையிட்டிருந்தார்.

இதனிடையில் தான் தயாரித்த 'கல்யாணப் பறவைகள்' படத்தைத் தாயார் வெளியிட்டதற்காக அவர் மீது 2 கோடி ரூபா நட்டஈடு கோரி வழக்குத்தாக்கல் செய்யவிருப்பதாகவும் தீபா அறிவித்திருந்தார்,

இந்த நிலையில் தீபா திடீரென்று சுகயீனமடைந்து வடபழனி மருத்துவ மனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டார்.

அவரைப் பார்க்க அவரின் பெற்றோர்கள் மருத்துவமனைக்குச் சென்றபோது தீபா கூச்சலிட்டார்.

தன்னைக் கடத்தி கொண்டு போக தாய் வந்திருப்பதாகப் பொலீஸுக்கு அறிவித்தார்.

அதைத் தொடர்ந்து தீபாவுக்கு பொலீஸார் பாதுகாப் பளித்துள்ளனர்.

பின்னர் தீபா செய்தியாளரிடம் சொன்னதாவது;

எனது வீட்டை அன்னை இந்திரா அனாதை ஆசிரமமாக மாற்ற முடிவு செய்துள்ளேன். ஆதரவற்ற பெண்களுக்கு அங்கும் இடமளிக்கப்படும்.

எனக்கும் ஜெயலலிதாவுக்கும் ஒற்றுமை பல உள்ளன. அவரும் நடிகை நானும் நடிகை. அவரும் அரசியல் வாதி நானும் அரசியல் வாதி.

எனக்கு உள்ள கூடுதல் புள்ளி நான் ஜெயிலுக்குச் சென்று வந்து விட்டேன் என்பதாகும்.

காங்கிரஸ் கட்சிக்காக நான் பாடுபட்டு வருகின்றேன்.

இப்படி நடிகை தீபா சொன்னார். (எ)

★ தி. மு. க. அரசுக்கு எதிரான

# கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தை கைவிட்டு புதிய இயக்கம் ஆரம்பிக்க அ.தி.மு.க முடிவு

சென்னை ஜூலை 11
முதலமைச்சர் கருணாநிதிக்கும் மற்றும் சில அமைச்சர்களுக்கு எதிராக அதிமுக கடந்த மூன்று மாதங்களாக நடத்தி வந்த கறுப்புக் கொடி போராட்டம் கைவிடப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டது.

இது சம்பந்தமான அறிக்கை ஒன்றை அதிமுக பொதுச்செயலளார் செல்வி ஜெயலலிதா வெளியிட்டார்.

கருணாநிதியின் ஆதரவாளர்களால் அதிமுக உறுப்பினர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. அதனால் கறுப்புக் கொடி போராட்டம் கைவிடப்படுவதாக செல்வி ஜெயலலிதா தெரிவித்தார்.

முதலமைச்சர் கட்டவிழ்த்து விட்டுள்ள அராஜகத்தை எதிர்த்து மாநில அளவில் புதிய எதிர்ப்பு இயக்கம் ஒன்றுவிரைவில் ஆரம்பிக்கப்படும் என்று செல்வி ஜெயலலிதா தெரிவித்தார்.

கடந்த மார்ச் 25 ஆம் திகதி சட்டசபையில் தன்னைத் தாக்கியதாகக் கூறப்படும் அமைச்சர்கள் முதலமைச்சர்கள் ஆகியோருக்கு எதிராக கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம்நடத்தப்பட்டு வந்ததாகவும் அவர் கூறினார். (எ)

# கடவுள் என என்னை ஏன் அழைக்கிறீர் புரியவே இல்லை என்கிறார் கருணாநிதி

தர்மபுரி, ஜூலை 11
முதலமைச்சர்கருணாநிதிக்கு தர்மபுரியில் அண்மையில் பொது வரவேற்பளிக்கப்பட்டது.

அப்போது முதலமைச்சர் பதிலளித்துப் பேசியதாவது;

பற்று, பாசம் காரணமாக ஒருவர் இதயவேந்தன் என்று பாராட்ட, இன்னொருவர் தமிழ்வேள் என்று புகழ்ந்தார்.

இதற்கு மேலாக என்னைப் பாராட்ட வேண்டும் என்பதற்காக என்னைக் கடவுள் என்றும் வர்ணித்தனர்.

இது எனக்குத் தந்த பெருமையா? அல்லது கடவுள் என்றால் எதையும் கவனிக்காமல் இருப்பார் என்கிற எண்ணத்தோடு எழுந்த கற்பனையா?

கடவுள் என்று சொல்லும்போது நான் உண்மையிலேயே வருத்தப்படுகிறேன்.

ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பது தி. மு. கவின் கடவுள் கொள்கை.

ஆயிரக்கணக்கான தெய்வங்கள் தேவை இல்லை.

என்னைக் கடவுள் என்று சொல்லும்போது எனக்கிருக்கிற வருத்தம் எல்லாம் நான் என்றைக்காவது, நீங்கள் பேசி நான் பதில் சொல்லாமல் இருந்ததுண்டா?

பிறகு ஏன் என்னைக் கடவுள் என்று அழைக்கிறீர்கள்?

என்றைக்காவது என்னை நீங்கள் அழைத்து நான் வராமல் இருந்தது உண்டா?

பிறகு ஏன் என்னை கடவுள் என்று சொல்கிறீர்கள்? எனக்குப் புரியவில்லை

நான் ஒரு சாதாரண மனிதன் ... எனவே என்னை உடன் பிறப்பே, தொண்டனே என்றழையுங்கள். தேவைப்பட்டால் மன்னித்துக் கொள்கின்றேன், தலைவனே என்றழையுங்கள்.

அதற்கு மேல் சென்று கடவுள் என்றழைத்து என்னை அருள்புரியாதவனாக, வரம்தர முடியாதவனாக, பேச முடியாதவனாக என்னை ஆக்கி விடாதீர்கள்,

கடவுள் எல்லாவற்றையும் கடந்தவன். நான் எல்லாவற்றையும் கடந்தவனல்லன். கடவுள் ஆசாபாசங்களுக்கு அப்பாற்பட்டவன். எனக்கு ஆசாபாசங்கள் உண்டு.

தமிழ் மக்களை வாழவைக்க வேண்டும்; உடன் பிறப்புக்களோடு சேர்ந்து நாட்டுக்கு உழைத்துக் கொண்டே இருக்க வேண்டும் என்ற ஆசை எனக்கு உண்டு

இப்படி கருணாநிதி பேசினார். (எ)

## இத்தாலி நெருக்கடி தொடர்கின்றது

ரோம், ஜூலை11
பிரதமராக நியமிக்கப்பட்ட கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த சிறியாக்கோடி மித்தா அரசாங்கத்தை அமைக்கும் தமது முயற்சியில் வெற்றி காணவில்லை.

இதனால் இத்தாலியில் 7வார காலமாக இருந்துவரும் அரசியல் நெருக்கடி மோசமாகியுள்ளது.

அமைக்கப்படவிருக்கும் அரசாங்கம் இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின் இத்தாலியில் ஏற்படவிருக்கும் 49 ஆவது அரசாங்கமாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## பூகம்பத்துக்கு 18 பேர் பலி!

டோக்கியோ, ஜூலை 11
ஜப்பானில் நேற்று நடந்த இரண்டு பூகம்பங்களினால் 18 பேர் உயிரிழந்தனர்

இரண்டு பூகம்பங்களும் சில நிமிட இடைவெளியில் நிகழ்ந்ததாக அறிவிக்கப்பட்டது. இவற்றினால் பல கட்டிடங்கள் சேதமடைந்தன. வீடுகளில் இருந்த பாவனைப் பொருட்கள் கூட நொருங்கி நாசமாகின. பூகம்பங்கள் தொடர்ந்து நிகழலாம் எனவும் அறிவிக்கப்பட்டது. (அ-9)

## ... சிந்தனைகள்

குர்பானி (ஆடு, மாடு, ஒட்டகை போன்றவைகளை அறுத்து ஏழைகள், இனபந்துக்கள் போன்றோருக்குக் கொடுக்கும் இறைச்சி) பற்றி நபிகள் (ஸல்) அவர்களிடம் அதனை நிறைவேற்றுவதால் எங்களுக்கு என்ன நன்மைகள் உண்டு என கேட்கப்பட்டது. அதற்கு (ஸல்) அவர்கள் நீங்கள் அறுக்கும் அப்பிராணியின் உடலில் எவ்வளவு உரோமங்கள் இருக்கின்றனவோ அவ்வளவு உரோமத்திற்கும் உங்களுக்கு அதிகமான நன்மைகள் உண்டு. எனவே அம்மிருகத்தின் உரோமமளவு நன்மை பெறுவதற்கும், ஏழைகளுக்கு வழங்கி அவர்களை மகிழ்விப்பதற்கும் முன்வரவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
★ தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
நெக்கட்டிவ் [Processing] செய்தல் இலவசம்
★ விற்பனை வர்ண நிழற்படச் சுருள்கள்
Kodak Fuji Konic.
Tudor Fort B/W
[illegible]
பெற்றுக் கொள்ள நாடுங்கள்.

# உதயன்

12 07 · 1989 புதன்கிழமை

எம்மிடம் வர்ண நிழற்படப் பிரதிகளை
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள
போட்டோ அல்பங்கள் இலவசம
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

யாழ். பல்கலைக்கழக

# எம். பி. பி. எஸ் 3 ஆம் ஆண்டு பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 12
யாழ் பல்கலைக்கழகத்தினுல் இவ்வாண்டு நடத்தப்பட்ட 3 ஆவது எம். பி. பி. எஸ் பரீட்சையில் பின்வருவோர் சித்தியடைந்துள்ளனர்.

முதலாவது வகுப்பு:- செல்வி. என். பாலசுப்பிரமணியம்:

(அதி திறமைச் சித்தி: நுண் கிருமி இயல் நுண் உயிரியல், நோய் இயல்)

இரண்டாவது வகுப்பு:- எவரும் இல்லை.

சாதாரண சித்தி:- எஸ். நடராஜா, எஸ். உதயகுமாரன், எம். தமிழ்தாசன், எஸ். அன்புதாசன் எஸ் சந்திரபாலன், செல்வி. எஸ். வெங்கடசாமி, செல்வி. எஸ். பூபாலன், எஸ். ஆர். அருளேந்திரன், எஸ். பாஸ்கரன், ஜி. இளஞ்செழியன். என். ஜனகன், எம். கீர்த்தி, ஜி. கேதீஸ்வரநாதன், என். லக்ஷ்மன், வீ. ஏ. டி. மேதர், செல்வி; வி. நமசிவாயம், கே. இராசரத்தினம் செல்வி. ஆர். இரத்தினசபாபதி, ரி. சிதம்பரகுமார், எஸ். சிவபாலன், கே. ஸ்ரீரத்தினகுமார், செல்வி: ஜே. வேலுப்பிள்ளை, செல்வி. பி. வைரமுத்து. செல்வி: ஆர் வடிவேல், ரி. கடோற்கஜன்.

### பகுதி I
### திருப்பி எடுத்தோர் பெறுபேறுகள்

யாழ். பல்கலைக்கழகத்தினுல் இவ்வாண்டு நடத்தப்பட்ட 3 ஆவது எம். பி. பி. எஸ். பரீட்சை (பகுதி I) - திருப்பி எடுத்தோர் (Repeat) பெறுபேறுகள்.

சாதாரண சித்தி: எஸ். நடராசா, எஸ். உதயகுமாரன், எம். தமிழ்தாசன், எஸ். அன்புதாசன், எஸ். சந்திரபாலன், செல்வி. எஸ். வெங்கடாசாமி, செல்வி. எஸ். பூபாலன், எஸ். ஆர். அருளேந்திரன் எஸ். பாஸ்கரன், ஜி. இளஞ்செழியன், என். ஜனகன், ரி. கடோற்கஜன், எம். கீர்த்தி, ஜி. கேதீஸ்வரநாதன், என். லக்ஷ்மன், டபிள்யூ. ஏ டி. மேதர், செல்வி. வி. நமசிவாயம், கே. இராசரத்தினம், செல்வி. ஆர். இரத்தினசபாபதி, ரி. சிதம்பரகுமார், எஸ். சிவபாலன், கே. ஸ்ரீரத்தினகுமார். செல்வி. ஜே. வேலுப்பிள்ளை, செல்வி. ஆர். வடிவேல்.

நூனசித்தி: செல்வி. ஆர். குஞ்சித்தம்பி (மருந்தாக்கல் இயல்பும் நுண் உயிரியலும்) கே. சுந்தரலிங்கம் (நுண் உயிரியல்).

### பகுதி II

யாழ் பல்கலைக்கழகத்தினுல் இவ்வாண்டு நடத்தப்பட்ட மூன்ருவது எம். பி பி, எஸ் பரீட்சை (பகுதி II) - திருப்பி எடுத்தோர் (Repeat) பெறுபேறுகள்:

சித்தி அடைந்தோர் வருமாறு: செல்வி. என். பாலசுப்பிரமணியம், எம். தமிழ்தாசன், எஸ்- அன்புதாசன், எஸ். சந்திரபாலன், செல்வி. எஸ். வெங்கடாசாமி, எஸ். பாஸ்கரன் செல்வி. பி: வைரமுத்து கே: சுந்தரலிங்கம்.

நூன சித்தி: கே. அற்புதராசா (சமூக மருத்துவம்) (ச)

## நன்றி நவிலல்

### திரு. மாட்டின் செல்லையா
(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர்)

4-7-89 இல் அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவர் திரு. மாட்டின் செல்லையா (இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர்) அவர்களின் இறுதிச் சடங்கிலும் ஆன்ம சாந்தித் திருப்பலியிலும், கலந்து கொண்டு எமது துன்பத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது இதயம் கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்ருேம்.

திருமதி. மாட்டின் செல்லையா,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சென். அன்ரனீஸ் வீதி,
பண்டத்தரிப்பு
(T/7455)

## ஆழ்ந்த கவலையைப் பகிர்தல்

### நடிகமணி வி. வி. வைரமுத்து

நடிகமணி வி. வி. வைரமுத்து அவர்களின் மறைவு கேட்டு அதிர்ச்சியுற்ருேம். அவர்களின் இழப்பால் வாடுகின்ற மனைவி, மக்கள், கலைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு, நாடளவில் உள்ள ரசிகர்களுடன் நாங்களும் இணைந்து எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்கின்ருேம்.

223, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
11 - 7 - 1989

கௌரவ செயலாளர்,
திருமறைக்கலாமன்றம்,
(சி/2904)

உ
சிவமயம்

## பிரம்மோபதேச அழைப்பிதழ்

அன்புடையீர்!

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் சுக்கில வருடம் ஆனி மாதம் 29 ஆம் நாள் (13 - 07 - 1989) வியாழக்கிழமை காலை 8. 20 மணி முதல் 10 30 மணி வரை வரும் சிம்மலக்கின சுப வேளையில்

பிரம்மஸ்ரீ கி. நாராயண சாஸ்திரிகளின் பேரனும் எமது குமாரனும் ஆகிய

### சிரஞ்சீவி ரவீந்திரனுக்கு

சௌள உபநயன, பிரம்மோபதேசஞ் செய்ய திருவருள் கூடியிருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து குமாரனை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றேம்.

இங்ஙனம்:
தங்கள் நல்வரவை நாடும்
கி. சோமசுந்தரஐயரும்
பாரியாரும்.

காங்கேசன்துறை வீதி,
கோண்டாவில் மேற்கு.
கோண்டாவில்.
(11513)

## 3 பாடசாலைகளின் ஜீ.சி.ஈ. முடிவுகள் இன்னும் வரவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 12
யாழ் மாவட்டத்தின் மூன்று பாடசாலைகளின் ஜீ.சி.ஈ. (சாதாரண) பரீட்சை முடிவுகள் இன்னும் வந்துசேரவில்லை என்று யாழ்-கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. நேற்று முன் தினம் வந்த 10 பாடசாலைகளின்முடிவுகளையும் அவ்வப் பாடசாலைகளின் அதிபர்கள் எடுத்துச் சென்று விட்டதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ஒ-3)

## கிளிநொச்சியில் இளைஞர் கொலை

வட்டக்கச்சி, ஜூலை 12
கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் கடத்தப்பட்டு சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

டிப்போச் சந்தியில் இவரது சடலம் போடப்பட்டிருந்தது. கிரனெட் வெடிப்புச் சம்பவம் ஒன்றில் இவர் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு இருந்தார் என்றும்- இவர் இரத்தினபுரத்தைச் சேர்ந்த க.முத்துலிங்கம் (வயது 20) என்பவர் என்றும் தெரியவந்தது. (ஒ-163)

### மத்திய......

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
சென்ற மேற்படி அமைப்பின் பிரதிநிதியுடன், ஐக்கிய இலங்கை தேசியக் கட்சியின் செயலாளர் திரு ருக்மன் சேனநாயக்காவுங் கூடச்சென்றிருந்தார். (உ-5)

### வியாபாரி மூலையில்......

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
திய சாலையில் சிகிச்சைபெற்று வருவோர் விவரம் வருமாறு:-

முனியாண்டி இந்திராதேவி (19 வயது). யூ. அமரவேல் (14 வயது), எஸ். நந்தா (20 வயது), வி. பேரின்பநாதன் (34 வயது)' எஸ். சசிகலா மூன்றரை வயது)

இப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஷெல்தாக்குதலில் வியாபாரிமூலை, வீ எம். ரோட், கல்லூரி வீதி, அல்வாய் போன்ற பகுதிகளில் உள்ள பல வீடுகள் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-[illegible])

### எதிர்க்கட்சிகளுக்கு கூட்டத்துக்கு அழைப்பு

திருகோணமலை, ஜூலை 12
வடக்கு - கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு அ. வரதராஜப்பெருமாள் எதிர்க் கட்சிகளின் கூட்டம் ஒன்றை இம் மாதம் 29 ஆம் திகதி நடத்த உள்ளார்.

இலங்கைத் தமிழர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை உணரச் செய்வதும் அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளைக் காண்பதுமே இக் கூட்டத்தை அழைத்ததன் நோக்கமாகும்.

இது சம்பந்தமாக நாட்டின் முக்கிய எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்கும் திரு. வரதராஜப்பெருமாள் கடிதம் எழுதியிருக்கிருர். [அ-எ]

## வட்டி வீதம் அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 12
ஊழியர் சேமலாபநிதிக்கு கொடுக்கப்படும் பணத்துக்கு வழங்கப்படும் வட்டி வீதம் அரைச் சதத்தினுல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

புதிய வட்டி 13 சத வீதமாகும். இது 1988 முதல் அமுலுக்குவந்துள்ளதாக தொழில் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (உ-எ)

# வடக்கில் ஜனசக்தித் திட்டம்; ஆரம்பிக்க ரூ. 9 கோடி ஒதுக்கீடு!

யாழ்ப்பாணம், ஜூலை 12
யாழ் மாவட்டத்தில் ஜனசக்தித் திட்டத்தை செயற்படுத்த ஒன்பது கோடி இருநூற்று ஐம்பத்து நாலு ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் பணம் யாழ்ப்பாணம் செயலகத்துக்கு வந்துசேர்ந்துள்ளது.

ஜனசக்தித் திட்டம் இம் மாதம் 29 ஆம் திகதி நாடெங்கிலும் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

யாழ் மாவட்டத்தில் யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவு தெரிவு செய்யப்பட்டு எதிர்வரும் 29ஆம் திகதி இத் திட்டம் இங்கு முதலில் நடைமுறைப்படுத்தப்பட இருக்கிறது.

பின்னர் படிப்படியாக சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். (ஒ-3)

## வாகனம் செல்லத் தடை!

யாழ்ப்பாணம், ஜூலை 12
பருத்தித்துறை வீதி, இருபாலைப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமுக்கு முன்பாக வாகனப் போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளது. (ஒ-10)

# நடிகமணி மறைவுக்கு ஈ.பி.ஆர்.எல்.எவ் அனுதாபம்

யாழ்ப்பாணம், ஜூலை 12
வசந்தகான சபாவின் ஸ்தாபகரும், சிறந்த நாடக நடிகரும், பாடகருமான நடிகமணி வி. வி. வைரமுத்துவின் மறைவு தமிழ் மக்களுக்கும், கலை உலகுக்கும் ஈடுசெய்ய முடியாததோர் இழப்பாகும்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறந்த நடிகராகவும், குரல் வளம் மிக்க பாடகராகவும், மேடை நாடக உத்திகள் நன்கு தெரிந்த நெறியாளராகவும் ஒரே சமயத்தில் திகழ்ந்த வைரமுத்து அவர்கள், கலை உலகிற்கும், இளம் கலைஞர்களுக்கும் தான்வாழ்ந்த காலத்தில் தமது முழுமையான பங்களிப்பை வழங்கினுர்.

மரபு வழி சார்ந்த நாடகத் துறையின் தலைமகனுக இது காலவரைவாழ்ந்த நடிகமணி, தமிழ் பேசும் மக்கள் தமது பிரதேசத்தையும், கலை, கலாசார, பண்பாடுகளையும் தாமே நிர்வகிக்கக்கூடிய சூழ்நிலையை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கும் இச் சமயத்தில், கலை உலகுக்கு மட்டுமல்லாமல் முழுத் தமிழ் பேசும் மக்களுக்கும் பேரிழப்பாகும் — என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# தென்பகுதியில் நேற்று இடம்பெற்ற சம்பவங்கள்

கொழும்பு, ஜூலை 12
தென் பகுதியில் நேற்று இடம்பெற்ற சம்பவங்கள் வருமாறு;-

★ பாதுகாப்புப் படையினர் சுமார் 50 ஆயிரம் தேசிய அடையாளக் கார்ட்டுகளை நேற்று மீட்டனர்.

★ கொழும்பு, மொனருகல கண்டி மற்றும் பதுளை மாவட்டங்களில் பாதுகாப்புப் படையினர் கடந்த 48 மணித்துயாலங்களில் சுமார் ஆயிரம் பேரை விசாரணைக்காக தடுத்து வைத்தனர்.

★ பாதுகாப்புப் படையினர் பல இடங்களில் நடத்திய தேடுதலின்போது ஏராளமான ஆயுதங்கள், கண்ணிவெடிகள் மற்றும் இராணுவ சீருடைகள் ஆகியவற்றைக் கைப்பற்றினர். (ஒ-எ)

### அறிமுக விழா

திருக்கேதீச்சர மான்மியப் புராதன காண்டத்தின் அறிமுக விழா எதிர்வரும் ஞாயிற்றுக் காலை சுன்னுகம் ஸ்ரீ கதிரமலை சிவன் தேவஸ்தானத்தில் நடைபெறும். [க]

## ராஜீவின் விசேட தூதுவர்--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
இடையேயான உறவில் பெரும் நெருக்கடியையும், விரிசலையும் ஏற்படுத்தும் விடயமாக மாறியிருக்கிறது.

இந்த இடைப்பட்ட ஒன்றரை மாத காலத்தில் இரு நாடுகளும் இவ் விவகாரம் குறித்து ஒன்றுக்கு மற்றது மாறுபட்ட நிலைப்பாடுகளையும், நடவடிக்கைகளையும் மேற்கொண்டன.

இவற்றில் —

இலங்கை ஜனுதிபதி முதலாவது கடிதம் ஒன்றை பிரதமர் ராஜிவ் காந்திக்கு எழுதியிருந்தார். அதற்கு திரு. காந்தி பதிலை அனுப்பி வைத்தார். இதனைத் தொடர்ந்து, தமது முந்திய நிலைப்பாட்டை வலியுறுத்தும் வகையில் திரு. பிரேமதாச மீண்டும் இரண்டாவது கடிதம் ஒன்றை அனுப்பினுர். அந்தக் கடிதத்துக்கு பிரதமர் ராஜிவ் எழுதிய பதிலுடனே திரு. தேஷ்முக் இன்று கொழும்பு [illegible]

அந்தக் கடிதத்தை ஜனுதிபதி பிரேமதாசாவிடம் நேரில் கையளித்து, பேச் வார்த்தை நடத்துவார் என்று வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். எனினும் பதில் கடிதத்தில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்ற விவரத்தை அவர் வெளியிடவில்லை.

திரு தேஷ்முக் ஏற்கனவே வாஷிங்டனுக்கும் லண்டனுக்கும் சென்று இலங்கை நிலைமை பற்றி ஜனுதிபதி புஷ், பிரதமர் மார்கரட் தாட்சர் ஆகியோரின் முக்கிய உதவியாளர்களைச் சந்தித்து விவரித்து இருந்தார்.

பிரதமர் ராஜீவ் காந்தி பிரான்ஸ், மாஸ்கோ, பாகிஸ்தான் ஆகிய மூன்று நாடுகளுக்கு முக்கிய விஜயம் மேற்கொண்டு இன்று புறப்படும் இவ்வேளையில் திரு. தேஷ்முக் கொழும்பு செல்வதும் விஷேசமாக அமைகிறது என அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர். (ஆ-எ-9)

## மரண அறிவித்தல்கள்

### நாகராசா லோகேஸ்வரன்

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மானிப்பாயை வசிப்பிடமாகக் கொண்டவரும், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன பொறியியல் பகுதியில் கடமையாற்றியவருமான நாகராசா லோகேஸ்வரன் 10-07-1989 இல் அகாலமரணமானுர்.

அன்னுர் பருத்தித்துறையைச் சேர்ந்த காலஞ்சென்ற நாகராசா, வள்ளி தம்பதிகளின் அன்பு மகனும், மானிப்பாயைச் சேர்ந்த நாககுலோசனுவின் அன்புக் கணவரும், பாரதியின் அன்புத் தந்தையும், விக்னேஸ்வரன் (பொலீஸ் உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்), வரேந்திரராசா (பருத்தித்துறை ப. நோ. கூ. சங்க முகாமையாளர்), ஸ்ரீகண்ணன், ஸ்ரீகாந்தன், கெங்காதேவி ஆகியோரின் சகோதரரும், மானிப்பாய் கந்தையா நாகரத்தினம் அவர்களின் அன்பு மருமகனும், தெய்வகுலரத்தினம் (முல்லைத்தீவு கல்வித் திணைக்கள லிகிதர்) அவர்களின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னுரின் ஈமக்கிரியைகள் 12-07-1989 இன்று புதன்கிழமை காலை 9-00 மணிக்கு மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வ. சந்திரராஜ்
(11518)

### திருமதி மார்க்கண்டு இராசம்மா

திருமதி மார்க்கண்டு இராசம்மா 11-07-1989 இல் காலமாகிவிட்டார்.

இவர் திரு: தங்கராசா, திருமதி மகாலட்சுமி, திரு. ரத்தினம் (அவுஸ்திரேலியா) காலம்சென்ற சரஸ்வதி, நாகரத்தினம் ஆகியோரின் அன்புத் தாயாரும், மகேஸ்வரி, இரத்தினசபாபதி, சிதம்பரநாதன், வானதி, கணபதிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னுரின் ஈமக்கிரியைகள் 12-07-1989 இன்று புதன்கிழமை காலை 10-00 மணிக்கு இல. 13, அரசடி லேன், தட்டா தெரு இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். உற்ருர், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. மகேஸ்வரன்
அரசடி லேன்,
தட்டா தெரு.
(11512)

### திரு. பேரின்பநாதன்

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட பேரின்பநாதன் அகாலமரணமானுர்.

இவர் சீதாதேவியின் அன்புக் கணவரும், தக்சனின் அன்புத் தந்தையும், திருமதி பஞ்சாட்சரத்தின் மருமகனும், சண்முகநாதன், கனகேஸ்வரி, சோமேஸ்வரி, யோகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாலசுந்தரம் (சவூதி), சிறி, மகேஸ்வரி, கமலாதேவி, நடராசா, சுதேசபவன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னுரின் ஈமக்கிரியைகள் பருத்தித்துறையில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று காலை 10-30 மணிக்கு குடும்ப மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்;
க. மாரிமுத்து
சிவன் கோவிலடி.
பருத்தித்துறை.

### திரு. பாவிலுப்பிள்ளை இராயப்பு
(தம்பு)

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், எழுதுமட்டுவாளி வசித்தவருமான திரு: பாவிலுப்பிள்ளை இராயப்பு யாழ்ப்பாணத்தில் காலமானுர்.

இவர் காலம் சென்ற திரேசம்மாவின் அன்புக் கணவரும், அந்தோனியாப்பிள்ளை, யோசேப்(பொலீஸ் உத்தியோகத்தர், யாழ்: பொலீஸ் நிலையம்), புஸ்பரத்தினம், அருள்நாயகம் (சுண்டிக்குளி தபாலகம்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சூசைப்பிள்ளை (இளைப்பாறிய கனிஷ்ட பரிசோதகர்,யாழ்.தபாலகம்), மல்லிமலர் (ஆசிரியை, எழுதுமட்டுவான்), தியாகராசா (சாலைப் பரிசோதகர் வ. பி. போ. ச., கிளிநொச்சி), மகிழ்மலர், செபரட்ணம் (இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்) ஆகியோரின் அன்பு மாமனுரும் ஆவார்.

அன்னுரின் பூதவுடல் இன்று (12-7-89) புதன்கிழமை மாலை 4 மணிக்கு நல்லடக்கத்திற்காக யாழ். புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்ருர்கள்.

தகவல்:
இ. யோசேப்.
(பொலீஸ் உத்தியோகத்தர்)
29/4, பழைய பூங்கா வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.
[11521]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினுல் யாழ்ப்பாணம் நாவலர்வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 12 - 07 1989இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.